# ஹெலேனா

அல்லது

## திருக்காய அடையாளம் பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம்



# ஹெலேனா

அல்லது

## திருக்காய அடையாளம் பெற்ற
## இலங்கைக் கன்னிகை சரித்திரம்

ஆக்கியோன் :

மகா வந். எட்மன் பீரிஸ், ஓ. எம். ஐ.

சிலாப மேற்றிராணியாண்டவர்.

தமிழில் மொழி பெயர்த்தவர்

விறதர் மரி ஜோசப், F. B.

# அறிவித்தல்

இப்புத்தகத்தில் அடங்கிய விஷயம் யாவும் அதில் கூறப்பட்டுள்ள வாய்மொழிகள், எழுத்துப் பிரதிகளின்படியொழியத் திருச்சபையின் யாதொரு தீர்மானத்தின்படியல்ல என்பதை விளங்கிக்கொள்ளவேண்டியது. ஆகையால் இதில் சொல்லப்படும் புதுமை, அற்புதம், தரிசனம், திருக்காய அடையாளம் முதலிய சொற்கள் பொது ஜனங்களிடையே வழங்கப்படும் அர்த்தத்தினொழிய, திருச்சபையால் ஆராயப்பட்டுத் தீர்மானம் பண்ணிய அர்த்தத்தைப் பெறாது. தனது மக்களின் அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றித் தீர்மானம்பண்ணுதல் நமது பரிசுத்த தாயாகிய திருச்சபைக்கே உரிய வேலையாகும். அந்தத் தீர்மானத்துக்கு நமது இந்தப் புத்தகத்தையும் அதில் அடங்கிய விஷயங்களையும் தாழ்ச்சி விநயத்துடன் சமர்ப்பிக்கிறோம்.

---

இப் புத்தகம் கொனாவில் கௌரவ
ஹெலேனா கன்னிகையின் ஸ்தாபனத்தால்
பிரசுரித்து விநியோகிக்கப் பட்டது
(2018.02.08)

---

விசேட குறிப்பு :

இப் பிரசுரம் 1948 ம் ஆண்டு
பிரசுரிக்கப்பட்ட மூலப் பிரதி புத்தகத்திலிருந்து ஸ்க்கான்
செய்து அச்சேற்றப்பட்டது.

# ஹெலேனா சரிதை


## ஆரம்பம் :

கி. பி. 1931-ம் ஆண்டு மாசி மாதம் 8-ந் திகதி இரவு, வட மேற்கு மாகாணத்திலே சிலாபப் பெரும்பிரிவில், தெற்குப் பிற்றிகல் கோறளையிலே ஓந்தற என்னும் பகுதியில் (Conawila) கோனுவில் என்ற கிராமத்திலுள்ள ஓர் கத்தோலிக்க இல்லத்தில் துறவியான கன்னிகை யொருத்தி காலஞ்சென்றாள். அவ்வூர்க் கத்தோலிக்கரிடையே அவள் சிஸ்றர் ஹெலேனா, ஹெலேனா குறுஸ் வாத்தியஹன்சே, ஹெயியா குறுஸ்ஹன்சே என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டாள். மரித்த இரண்டு நாளைக்குப் பிறகு அவளுடைய பிரேதம் (Conawila) கோனுவில் கத்தோலிக்க சேமக்காலையிலே மிகச்சங்கை மரியாதை சிறப்புடன் பூமிதானம் செய்யப்பட்டது. பிரேத அடக்கத்துக்காக மேற்கு, வட மேற்கு மாகாணங்களிலிருந்து பெருந் தொகையான சனங்களும் குருக்கள் சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் பலரும் வந்து கூடினார்கள். அவ்வகையான ஓர் பிரசித்த பிரேத அடக்கம் அவ்வூரில் வெகு காலத்துக்கும் காணக்கிடைக்கவில்லை. காலஞ்சென்ற கன்னிகை ஐசுவரியம், உத்தியோகம் முதலிய லௌகிக நன்மைகளால் விளங்கினவளல்ல. ஆயினும் அவளுடைய பிரேதத்துக்குச் செய்யப்பட்ட சங்கையோ ஆச்சரியகரமானது. அன்று (Conawila) கோனுவிலுக்கு வந்த சனங்களில் சிலர் அந்தச் சரீரத்தில் வெகுகாலத்துக்கு முன் நடந்த ஓர் புதுமையை ஞாபகப்படுத்தினர். சிலர் அவளுடைய புண்ணியம் பொலிந்த முன் மாதிரிகையான நற்சீவியத்தைப்பற்றி வர்ணித்தனர். வேறு சிலர் அவளுடைய செபத்தால் தாங்கள் அடைந்த ஆத்துமசரீர நன்மைகளை விபரித்தனர். பொதுவாக எல்லோரிடமும் பரம்பியிருந்த ஒரே உணர்ச்சி யாதெனில் அவள் சருவேசுரனுடைய விசேஷ கிருபாகடாட்சத்துக்குப் பாத்திரமான ஓர் புண்ணியவதி என்பதாம்.

அவளுடைய உத்தம சரிதையைத் தமிழ்ப்பாஷை பேசும் கத்தோலிக்கருக்கு அறிவிக்கும் நோக்கமாக இதை எழுதக் கருதினோம். இதில் கூறப்படும் விஷயங்கள், வாசிக்க, கேட்க ருசிகரமாயிருக்கும்படி கூட்டிக் குறைத்து வருணித்து எழுதப்பட்ட கட்டுக்கதைகளிலிருந்து எடுக்கப்பட்டவையல்ல. சம்பவம் நிகழ்ந்த காலத்திலேயே எழுதப்பட்டு, உண்மையென நம்பக்கூடியதாய்



வண. G. கார்சியா சுவாமியார்



ஹெலேனா கன்னிகை

மதிக்கப்பட்ட எழுத்துப் பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்டவையாம். அவற்றுள் பிரதானமானவைகளைத் தொகுத்துச் சுருக்கமாய்க் காட்டுவோம். இவை,

1-வது. ஹெலேனாவின் ஆத்தும குருவான வணக்கத்துக்குரிய புளோறென்திறோ கார்சியா சுவாமியாருடைய நாட் குறிப்புப் பிரதியிலிருந்தும் அதில் (1869-ம் வருடம் தொடக்கம் 1897-ம் வருடம் வரையும் உள்ள காலத்தின் விசேஷ சம்பவங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

2-வது. அவருடைய கடிதங்களிலிருந்தும் அவர் சத்தியம் செய்து உறுதிப்படுத்திய விஷயக் குறிப்பு அறிக்கையிலிருந்தும்.

3-வது; அக்காலம் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் அப்போஸ்தொலிக்க சிரேஷ்டராயிருந்த அதி வந்தனைக்குரிய கிறிஸ்தோப்பர் பொஞ்சின், ஓ. எம். ஐ., மேற்றிராணியாண்டவர் ஹெலேனாவைப்பற்றி நிகழ்த்திய விசாரணைக் குறிப்பு அறிக்கையிலிருந்தும் எடுக்கப்பட்டவை.

இவை யாவும் கையெழுத்துப் பிரதிகளாய் இங்கிலீஸ், லத்தீன், பிரான்ஸ், ஸ்பேன், இத்தாலி என்னும் பாஷைகளில் எழுதப்பட்டிருக்கின்றன.

## பிறப்பும் பாலப் பருவமும் :

நமது சரிதையின் உத்தமி கோணுவில் என்னும் கிராமத்தில் கி. பி. 1848-ம் ஆண்டின் பிற்பகுதியில் பிறந்தனள். அவளுடைய ஞானஸ்நானத்தைப்பற்றி போளவத்தை மீசாமின் ஞானஸ்நானப் பதிவுப் புஸ்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. 1849-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ந் திகதி பெயர் ஹெலேனா. வயது 5 மாதம். பிதாவின் பெயர் டொன் அந்தோனி. மாதாவின் பெயர் ஹெலேனா ஹாமி. ஊர் கோணுவில். ஞானப்பிதா, சிமோன் திசேராவின் மகன் பிலிப்பு திசேரா. ஞானத்தாய் அந்திரே பெரோராவின் மகள் செலஸ்தீனா பெரேரா. ஞானஸ்நானங் கொடுத்த குருவானவரின் பெயர் ஜே. சேசாரே மோலா. பிதாவின் பெயர் விதான அப்புகாமியின் டொன் அந்தோனி பெரேரா என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. (விசாரணைக் குறிப்பு) தாயின் பெயர் அள்கமுகோராளின் மதலேனா ஹாமி எனவும் கேள்வி.

இவர்கள் இருவருக்கும் நாலு ஆண்களும் மூன்று பெண்களும் பிறந்தார்கள். அவர்களுள் ஆக இளையவள் ஹெலேனா. கரோலிஸ் என்ற மூத்தவன் பிற்காலத்தில் கிராமத் தலைமை அதிகாரம் பெற்று கரோவிதானை என்ற பெயரால் ஊரில் அறியப்பட்டான். தகப்பன் புத்தசமயத்தவனாயிருந்து விவாகத்துக்குமுன் கத்தோலிக்க வேதத்தில் உட்பட்டபோதிலும் பழைய முறைப் பழக்க வழக்கங்களையே செய்துவந்தான். அவன் பில்லி, சூனியம் மந்திரம், யந்திரம் முதலிய பேய்க் கிருத்தியங்கள் செய்தபடியால் அதோனிஸ் அல்லது அதோக்கப்புருள (பேயாட்டி) என்னும் பெயர் அவனுக்கு வழங்கலாயிற்று. தாயின் முயற்சியால் சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளக் கிடைத்தது. மூத்த மகனாகிய கரோலிஸ் தன் தகப்பனின் அடியைப் பின்பற்றிக் கத்தோலிக்க வேதத்துக்கு விரோதியானான். ஆயினும் பெண்மக்கள் மூவரும் பத்தியொழுக்கமும் முன்மாதிரியுமான கத்தோலிக்காரானார்கள். இதனால் ஏற்பட்ட மனவொவ்வாமை நிமித்தம் குடும்பத்தில் அடிக்கடி சச்சரவு தொந்தரவுகள் நடந்தன.

ஹெலேனா சிறு வயதிலே உலக கல்வியாவது சமய கல்வியாவது கற்கப் பாடசாலைக்குப் போனவளல்ல. வீட்டிலும் நமது பரிசுத்த வேதத்தைப்பற்றிய யாதொரு உபதேசம் பெறும் பாக்கியம் அவளுக்குக் கிடைக்கவில்லை. அவள் சீயேனாக் கோறளையிலுள்ள மாக்கொலே என்னும் கிராமத்தில் புத்தசமயத்தவரான தன் உறவுமுறையார் வீட்டில் இருந்த காலத்தில் அறியாமையால் அவர்களோடு புத்தசமய (பன்சல்) கோயில்களுக்குப் போனாள். ஆயினும் தன் சகோதரிகள் இருவரும் உறுதிப்பூசுதலும் புதுநன்மையும் பெற ஆயத்தஞ் செய்கிறார்களென்று கேள்விப்பட்டு தாயின் உத்தரவு பெற்று ஊருக்குவந்து அவர்களோடு ஞானோபதேசம் கற்றுக்கொள்ள இரண்டு மாதகாலமாய் நாளாந்தம் (Bolawatta) போளவத்தைக் கோயிலுக்குப் போனாள். அப்போது அவளுக்கு வயது 12. அக்காலம் அங்கு கட்டளைக் குருவாயிருந்தவர் வணக்கத்துக்குரிய புளோறன்தினோ கார்சியா சுவாமியாராம். 1868-ம் ஆண்டு மார்கழி மாதத்தில் அதிவந்தனைக்குரிய செமேரியா, ஓ. எம். ஐ., மேற்றிராணி ஆண்டவர் போளவத்தைக்கு வந்து மூன்று மாதம் அங்கு தங்கியிருந்தார்.

ஹெலேனா ஞானோபதேசம் கற்க எடுத்த பெரும முயற்சியாலும் யேசுநாதரை உட்கொள்ளக் காட்டின ஆசையாலும் தன் சகோதரிகளோடு உறுதிப்பூசுதலும் புதுநன்மையும் பெறத் தெரிந்து கொள்ளப்பட்டாள். அவள் முதன்முதல் பாவசங்கீர்த்

தனம்பண்ணியது வணக்கத்துக்குரிய சுணவேல், ஓ.எம்.ஐ., சுவாமியாரிடமாம். இதுதொட்டு அவருடைய சீஷிய சரிதையின் புனித பாகம் திரும்புகிறபடியால் அதைப்பற்றி நன்றாய் விளங்கும்படி அறியவேண்டிய வேறு சில விஷயங்களையும் இங்கு சுருக்கமாய்க் காட்டுதல் தகுதியாகும்.

## பிறப்பிடம் :

கம்மல் என்னும் கிராமம் இலங்கைக் கத்தோலிக்க சரித்திரத்தில் மகா முக்கியம் பெற்றது. 1604-ம் ஆண்டில் (Baltasar) பலத்தசார் கார்சியா என்ற யேசுசபைக் குருவானவர் ஒருவர் அங்கு வந்து முதன்முறை கிறீஸ்து சமயத்தைப் போதித்தார். 6 வருடம் முடியுமுன் அங்கு கத்தோலிக்கரின் தொகை 700 க்கு அதிகமானபடியால் ஓர் புதுத் தேவாலயம் கட்டப்பட்டது. அதை ஆசீர்வதித்த தினத்தில் பெரும் கொண்டாட்டம் நடத்தி அவ்வூர்ச் சனங்களால் உலக சிருட்டிப்பு முதல் யேசுநாதரின் மனுஷாவதாரம் வரையுமுள்ள வரலாறு நாடகமுறையாய்க் காட்டப்பட்டது.

புதுக் கத்தோலிக்கரின் நன்நடக்கையையும் விசேஷமாய் வேத அறிவில் பிள்ளைகளின் விளக்கத்தையும்பற்றி அக்காலம் வேத கடமை நடத்திய குருமார் மிக வாழ்த்தியிருக்கின்றனர். ஒவ்வொரு ஞாயிறுவாரமும் தேவாலயத்தில் பாடசாலைப் பிள்ளைகள் ஞானோபதேச வினு விடை வாசித்தார்கள். கிறீஸ்துவர்கள் திருச் சிலுவையின் மட்டில் விசேஷ பத்திகொண்டிருந்தார்கள். ஒரு முறை அவர்கள் ஓர் பெரிய மரச் சிலுவையை ஊர்ப் பிரதானிகளின் தலைமையில் சிறந்த ஆடல் பாடல்களோடு பிரசித்தமாய்க் கொண்டுபோய் இடிந்து தகர்ந்து போயிருந்த ஓர் பேய்க் கோயிலின் நிலத்தில் நாட்டினார்கள். அவர்களுக்கு அதி வரண்ட காலம் அல்லது யாதொரு வியாதி துன்பம் வந்தபோது அந்த இடத்தில் கூடி நமது இரட்சணியத்தின் அடையாளத்தை நினைவுகூர்ந்து பத்தி உருக்கமாய்ச் செபிக்கப் பழகியிருந்தார்கள்.

1617-ம் ஆண்டில் நிக்கப்பிற்றியே (Bandara) பண்டார என்பவன் தொடங்கிய கலகத்தால் சண்டை சச்சரவு ஏற்பட்டு நாட்டில் சமாதானமும அமைதியும் இல்லாதுபோயின. இதனால் திருச்சபைக்குப் பல சங்கடங்கள் நேரிட்டன. கம்மல் தேவாலயம் கலகக்காரரால் இடிக்கப்பட்டது. கத்தோலிக்கர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்படி ஊரைவிட்டுக் காட்டுக்கோடினர். ஆயினும் கலகம் முடிந்தபிறகு திரும்ப ஊருக்கு வந்து தேவாலயத்

தைக் கட்டியெழுப்பினர். 1628-ம் ஆண்டு தொடக்கம் ஓர் குருவானவர் கம்மலில் தங்கியிருந்து சூழவுள்ள இடங்களுக்குப்போய் வேதத்தைப் போதித்தார்.

அதே காலத்து வரலாறு அறிக்கைகளில் காண்கிறபடி 1644-ம் ஆண்டில் கம்மலில் கத்தோலிக்கரின் தொகை 1000 மும் பாடசாலைக்குப் போன பிள்ளைகளின் தொகை 150 மாம். ஒல்லாந்த அரசாட்சி இலங்கையில் நிலைத்த 1656 தொடக்கம் 1687 வரையும் ஓர் குருவானவராவது இங்கு இருக்கவில்லை. ஆசாரத்துக்குரிய யுசேவாஸ் சுவாமியாரின் வருகைக்குப் பின்பு திரும்பவும் கம்மலில் வசிப்பவர்களுக்குத் திருச்சபையின் தேவதிரவிய அனுமானங்களைப் பெறவும், புத்தி பிரசங்கம் கேட்கவும் வசதி கிடைத்தது. ஒல்லாந்தர் காலத்தில் சிலாபம், புத்தளம் இரு பகுதியும் சிங்கள அரசர்களுக்கு உரியதாய் இருந்ததால் அப்பகுதியார் பதித மதத்தவரின் நிஷ்டூரங்களிலிருந்து தப்பியிருந்தனர். ஆகையால் ஆசாரத்துக்குரிய வாஸ் சுவாமியாரும் ஏனைய ஒறெத்தோறியானு சபைக் குருக்களும் கம்மல் பகுதியைத் தங்குமிடமாகக்கொண்டு அடிக்கடி நீர்கொழும்பு, கொழும்பு முதலிய பகுதிகளுக்கு வேத கடமை நிறைவேற்றப் போய்க் கொண்டிருந்தார்கள். வணக்கத்துக்குரிய (Gonsalves) கொன்சால்வஸ் சுவாமியாரின் புத்தகங்களில் பல எழுதப்பட்டது கம்மலிலிருந்தேயாம். 1741-ல் அவர் போளவத்தையை முக்கிய ஸ்தலமாகக்கொண்டு தமது கடைசிக் காலத்தை அங்கே கழித்தபடியால் அந்த போளவத்தையே அவருடைய பூச்சியமான உடலை ஏற்றுக்கொள்ளப் பாக்கியம் பெற்றது. 1746-ம் ஆண்டில் ஸ்ரீ விஜயராஜ சிங்காசன் கண்டியில் சில துஷ்டரால் உருவேற்றப்பட்ட ஓர் பேயுருவத்துக்குப் பயந்து மலைநாட்டு ராக்கினியின் எரிகிற பலியாக ராஜபக்தியுள்ள யாதொரு குற்றமுமில்லாத கத்தோலிக்கரின் தேவாலயம் பலவற்றை அக்கினிக்கு இரையாக்கினன். போளவத்தையின் பரிசுத்த தேவாலயமும் அப்பொழுது அழிந்துபோன போதிலும் 1769-ம் ஆண்டு அது திரும்பவும் கட்டப்பட்டது. அன்றியும் ஒல்லாந்தர் கத்தோலிக்கருக்குச் சமய சுயாதீனம் கொடுத்தபடியால் திருச்சபை புத்துயிர் பெற்று வெகு சிறப்பாய் விளங்கத் தொடங்கியது. 1806-ல் ஆங்கிலேயர் இலங்கையில் பூரண சமய சுயாதீனம் கொடுத்தனர். 1835-ல் இலங்கைத் கத்தோலிக்க சபை ஓர் புது மேற்றிராசனமாக்கப்பட்டது. ஆயினும் கிறீஸ்து வேதத்தைப் பிசாசின் வாயினின்று காப்பாற்றிய ஒறெத்தோறியானு சபை போர்த்துக்கீஸ் அரசின் குற்றத்தால் அழிந்துபோக ஐரோப்பிய வேத போதகர் திரும்பவும் இலங்கைக்கு வந்தனர்.

1847-ல் இலங்கைத் திருச்சபையின் ஆட்சி இரு மேற்றிராசனங்களாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன :- மகா ஓயாவுக்கு வடக்கே யாழ்ப்பாண மேற்றிராசனம். தெற்கே கொழும்பு மேற்றிராசனமாம்.

1850-ம் ஆண்டு ஆவணி மாதம் போளவத்தைப் புதிய தேவாலயம் (இப்போதுள்ள ஆலயம்) மகா வந்தனைக்குரிய (Betacceni) பெறறக்கீனி மேற்றிராணியாண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டது. அக்காலம் கம்மலும் போளவத்தையும் கத்தோலிக்கரால் நிறைந்திருக்க அதன் சுற்றிலுள்ள கிராமங்களோ புத்த சமயத்தவரால் நிறைந்திருந்தன. கொடல்ல, கோனுவிலப் பகுதிகளில் புத்த சமயப் (பண்சல்) கோவில்கள் மாத்திரம் இருந்தன. 1844-ம் வருடத்தில் (Godella) கொடல்லவில் தேவாலயம் ஒன்றைப்பற்றி ஒறெத்தோறியானு அறிக்கைகளில் குறித்திருக்கின்றது. கோனுவிலவில் தேவாலயம் கட்டும்படி 1867-ல் ஓர் காணி விலைக்கு வாங்கப்பட்டது.

## புண்ணிய படிகள் :

தைலேனுவின் புண்ணிய சீவியமாகிய படகை, ஆரம்பத் தொட்டுப்(பல)சந்தேகம், துர்ச்சோதனை முதலிய பெரும் கொடிய அலைகளிலிருந்து காப்பாற்றி, ஒழுங்கீனம், புத்திக்குறைவு என்னும் கற்பாறைகளிலிருந்து தப்பவைத்து, தொந்தரவு, அடி, உதை என்னும் கடலின் மறுகரை வரையும் நடத்திச்சென்று கடைசியில் சாந்தமும் அமைதியுமான தோற்றத்தை அவனுக்குக் காட்டியவர் வணக்கத்துக்குரிய புளோறன்தினொ கார்சியா சுவாமியாரே. அவர் ஸ்பானிய தேசத்தில் பிறந்து அர்ச். (Bernard) பெர்னர்து முனிவரால் ஸ்தாபிக்கப்பெற்ற சிஸ்றர் சியானு சந்நியாச சபையிற் சேர்ந்த பத்தியும் புத்தியுமுள்ள ஓர் சந்நியாச குருவாம். நிரீச்சுரவாத அரசாட்சியாரால் சந்நியாசிகளுக்கு எதிராய்ப் பிறப்பித்த கொடிய சட்டத்தினிமித்தம் இவர் இத்தாலியில் பரதேசியாகி 1845-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ந் திகதி இன்னுமோர் ஸ்பானிய சந்நியாசியாரான வணக்கத்துக்குரிய புளோறியானு ஒறுஞ்ஞா சுவாமியாரோடு இலங்கைக்கு வந்தார். அவர் கொஞ்சக் காலம் திரிகோணமலையில் வேதபோதக கடமையாற்றிப் பின் 1849-ம் ஆண்டு சிலாப மீசாமின் கட்டளைக் குருவாக நியமனம் பெற்றார். அக்காலம் அம்மீசாம் மகாஓயா தொடக்கம் தெதுறு ஓயா வரையும் விசாலித்திருந்தபடியால், 1850-ம் ஆண்டு இரு பிரிவாக்கப்பட்டு போளவத்தை மீசாம் வண. கார்சியா சுவாமியா

ருக்கும், சிலாப மீசாம் வண. ஒறுஞ்ஞா சுவாமியாருக்கும் கொடுக்கப்பட்டது. அதுதொட்டு அவருடைய மரணபரியந்தம் 1900-ம் ஆண்டு வரையும் போளவத்தை கார்சியா சுவாமியாரின் முக்கிய ஸ்தானமாயிருந்தது.

"ஹெலேனு முதன்முறை பாவசங்கீர்த்தனம் செய்கையில் சரியான விளக்கம் இல்லாதிருந்தாலும் நாள் செல்லச் செல்ல யாவும் நன்றாய் விளங்கித் திரும்பத் திரும்ப அத்தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுக்கொண்டாள். தேவநற்கருணை வழியாய்த் தன் இருதயத்துள் யேசுநாத சுவாமியை உட்கொண்ட பிறகு உலக சந்தோஷத்தின்மேல் வெறுப்பும் தன் ஆத்தும இரட்சணியத்தின் மட்டில் தணியாத ஆசையும், சருவேசுரனுக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்க மிகுந்த மெய்யான ஆவலும் அவளுக்கு உண்டாயின. ஆகையால் பாவம், துர்க்குணம் யாவையும் வேரோடு பிடுங்கி எறிய முயற்சித்தாள். தேவநற்கருணை உட்கொண்ட நாட்களில் தன் இருதயத்துள் அக்கினிபோல் எரிந்து கொண்டிருந்தாள். அந்த உணர்ச்சி திவ்விய நற்கருணை உட்கொண்ட ஒவ்வொரு முறையும் புதுப்பிக்கப்பட்டபோதிலும் மறு முறைவரையும் அது நாளுக்கு நாள் குறைந்துகொண்டுபோனது.

"அந்நாட்களில் தன் ஊரில் வசித்த ஏனைய வாலிப பெண்களைப்போல் ஹெலேனு உடைகளையும் ஆபரணங்களையும் விளையாட்டுகளையும் விரும்பினாள். ஆயினும் தேவநற்கருணை உட்கொண்ட நாட்களில் அவற்றைக் கவனியாது தன்நேச ஆண்டவரை மாத்திரம் நினைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஞானோபதேசம் படிப்பித்தவர்கள் வண. கார்சியா சுவாமியாரும், வண. பிறன்சீஸ் சவியேர் சுவாமியாரும், இன்னும்சில சுவாமிமாருமாம். மூன்று மாதத்துக் கொருமுறை பாவசங்கீர்த்தனம் பண்ணவும் திவ்விய நற்கருணை உட்கொள்ளவும் அவளுக்கு உத்தரவு கிடைத்தது. ஓர் குற்றம் நடந்தவுடன் உடனே அதைப்பற்றித் துக்கப்பட்டுத் தலை குனிந்து தரையில் சிலுவையடையாளம் வரைவது அவளுடைய வழக்கம். தியானம் செய்யும்முறை சரீர ஒறுத்தல் முயற்சிகளைப்பற்றி அதிக விளக்கமில்லாவிடினும் எல்லாச் சனிக்கிழமைகளிலும் தபசுகாலத்தின் வெள்ளிக்கிழமைகளிலும் ஒருசந்தியிருந்தாள். மூன்று வருஷமாக அவள் ஜீவித்த சீவியம் சிறுசிறு குற்றங்கள் நிறைந்ததும் பத்திச் சுறுசுறுப்பும், வெதுவெதுப்பும் கலந்ததுமான ஓர் காலமாகும்" (நாட் குறிப்புப் புத்தகம்.)

**புண்ணிய யுத்தம் :**

ஹெலேனுவின் புண்ணிய வீரம் உறுதியாகவும் நற்குணங்கள் விர்த்திக்கவும் ஏதுவாயிருந்தது, அவள் பெற்றோராலும் மூத்த சகோதரனாலும் உண்டான எதிர்ப்பு விரோதங்களாம். அவர்கள் பெருக்குமாத்திரம் கத்தோலிக்கராயிருந்து புத்த சமய பழக்க வழக்கங்களில் நாட் கழித்தனர். செய்கையால் மாத்திரமன்று வார்த்தையாலும சருவேசுரனை நிந்தித்தார்கள். யந்திரம், மந்திரம், சோதிடம், சூனியம் முதலிய அஞ்ஞான கிரியைகளைச் செய்தார்கள். மூன்று வருட காலமாய் அவர்கள் ஹெலேனுவைக் கோவிலுக்குப் போகவிடாமல் நிறுத்திப் புத்த சமய பன்சல் கோவில்களுக்குக் கொண்டுபோக இயன்றளவு பிரயாசப்பட்டார்கள். சிலவேளை அவளுடைய உடுப்புகளை மறைத்துவைத்துத் திவ்விய பூசைக்குப் போவதை நிறுத்த முயற்சித்தார்கள். ஆயினும் அவள் நூதன வழிவகைகளைக் கைக்கொண்டு நாளாந்தம் தவறாது திவ்விய பூசைக்குப் போனாள். அவளுடைய பத்தி அவர்களுடைய பகிடிக்கும் பரிகாசத்துக்கும் இலக்காயிருந்தாலும் பயப்படாது பத்திக்கடமைகளை நன்றாய் நிறைவேற்றினாள்.

அவளுடைய மூத்த சகோதரன் பேய்க்குப் பூ வைக்கும் பூக்குடிலொன்று வீட்டு முற்றத்தில் செய்தபோது அவள் அதை உடைத்து விழுத்தினாள். ஒருமுறை அவன் மந்திரித்து வைத்த தண்ணீர்ப் பானையை அவள் கையிலெடுத்து பேயின் வல்லமையை நிந்திக்கும் நோக்கமாய்த் தண்ணீரைக் குடித்தாள். இதைக் கண்ட அண்ணன் கோபத்தால் பொங்கி ஓர் தடி கொண்டுவந்து கோபந் தணியுமட்டும் அவளை அடித்தான். அவனுக்குக் கிடைத்த முதல் குழந்தையை ஞானஸ்நானம் கொடுக்கக் கோயிலுக்குக் கொண்டுபோகமுன் துடக்கு நீக்கல் முதலிய அஞ்ஞான கிரியைகளைச் செய்யும்படி பேய்க் கோவிலுக்குக் கொண்டுபோனார்கள். அவ்வேளை ஹெலேனு குறுக்கே பாய்ந்து என்னைக் கொன்றாலும் ஆண்டவரின் பிள்ளையைப் பேய்க்கு ஒப்பிக்க இடம் கொடேனென்று அழுதுகொண்டு அதைத் தடுத்தாள். இதைப்பற்றியும் கோபங்கொண்ட அண்ணன் தடி எடுத்துவந்து உன்னையும் கொன்று நானும் தூக்குமரம் போவேனென்று சத்தமிட்டு அவளுடைய தலையும் உடலும் வீங்குமவரையும் அவளை அடித்தான். ஆயினும் ஹெலேனு அவனின்மேல் சற்றுங் கோபங்கொள்ளாது பட்ட அடிகள், வேதனைகள் யாவையும் அவனுடைய மனந்திரும்புதலுக்காகச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாள்.

ஒருநாள் அவள் தகப்பன் தேவதை பூசைக்காய் ஆலயங் கொண்டு செல்ல எண்ணெய், பூ, உரித்த தேங்காய் முதலியன

ஆயத்தஞ் செய்ததைக் கண்ட ஹெலேனாவுக்கு ஆத்திரம் மிகுந்த ஞானஸ்நானத் தண்ணீராலும், சுத்தமான தைலத்தாலும் மெய்யான ஒரே சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர் நரக வாசிச் சத்துருவான பிசாசுக்கு இவ்வகையாய்ப் பலி காணிக்கை ஒப்புக்கொடுத்து அதைச் சேர்தல் எவ்வளவு துக்கத்துக்குரியதென எண்ணி எதுவிதமும் அதைத் தடுக்க முயற்சித்தாள். தேவதைப் பூசைக்குக் கொண்டுபோகும் பொருளை எச்சில் உபயோகப்படுத்தாது கொண்டுபோதல் வழக்கம் என்பதை அறிந்திருந்த அவள் பிசாசோ யேசுநாதரோ வல்லபமுடையவரெனப் பார்ப்போம் என்று சபதங் கூறி அந்த எண்ணெயில் கொஞ்சம் எடுத்துத் தன் தலையில் பூசிக்கொண்டாள். தேங்காய் ஒன்றைத் துவாரமிட்டு அதன் தண்ணீரைக் குடித்தாள். மற்றைய பொருட்களையும் தொட்டுப் பிடித்து எச்சில் பண்ணினாள். இதற்குத் தகப்பனால் கிடைத்த வெகுமதி அடியும் உதையுமாம்.

## வெற்றி :

மேலே கூறிய மூன்று வருடமும் துன்பம் பீடை நிந்தை முதலியன நிறைந்த காலமாயிருந்த போதிலும் ஹெலேனாவின் பத்தி திடமும், புண்ணிய மகிமையும் விளங்கிய காலமுமாகும். இந்த யுத்தத்திலிருந்து அவள் வெளிப்பட்டது புதியவளாக வல்ல புண்ணிய ஆயுதம் தரித்த ஓர் வீரவதியாகவேயாம். பொற்கொல்லன் பொன்கட்டியை நெருப்பிற் போட்டு அதிலுள்ள களிம்பு யாவையும் நீக்குவதெப்படியோ அப்படியே சருவேசுரன் துன்பத்தின் வழியாய்ப் புண்ணியவான்களைப் பாவ தோஷங்களினின்று சுத்தமாக்குகிறார். (சர்வப் பிரசங்கி 2—5) துறவிகள் நடுவே மடங்களிலிருந்து துறவறம் நடத்துதலிலும் பார்க்கப் பாவிகள் நடுவே தொந்தரவுகளுக்கு அகப்பட்டு மாசற்ற சீவியம் நடத்துதல் இலகுவல்ல. அது வீர சரிதையின் ஓர் இலட்சணமாம். பால வயதிலிருந்து வாலிப வயதுக்கு மாறும் காலம் எப்போதும் எவ்வளவோ ஆபத்துள்ள காலம். மோக ஆசை கெட்ட அசுத்த சோதனை, பற்பல ஒழுங்கற்ற உணர்ச்சிகள் அக்காலம் எழும்பும் காலம் அது. அதனால் துன்பப்படுதல் ஆதாமின் சந்ததிக்கு நியசம். ஆயினும் அதில் அடிபடாது மிதிபடாது தப்புபவர் விசேஷ சிறப்பிரசாதங்களுக்குப் பாத்திரராவர். மேற்கூறிய மூன்று வருஷமும் ஹெலேனா கழித்த சீவியம் கனமான பாவ அசுத்த தகாத நினைவுகள் இல்லாமலேயாம் (குறிப்புப் புத்தகம்.)

## தேவ ஊழியக்காரி :

சிறு வயதில் ஹெலேனா பாடசாலைக்குப் போகாதபடியால் புத்தகங்கள் வாசித்துப் புண்ணிய வழியைப் படிக்க இயலாதவளாய் இருந்தாள். தியானம்பண்ணும் வகையையும், தேவசந்நிதான முயற்சியையும்பற்றிச் சொல்லிக்கொடுத்தவர் யாழ்ப்பாணப்பட்டத்தில் கொஞ்சக்காலம் படித்துப் பழகின ரோசா என்னும் ஓர் பத்தியுள்ள பெண்பிள்ளையாம். ஹெலேனாவின் சகோதரிகளும் அந்த உபாத்தியாயிடம்தான் பற்பல நற்போதகங்கள் பெற்றுக் கொண்டனர். இச்சிறு கூட்டத்தார் அடிக்கடி கூடித் தியானம் பண்ணினர். செபஞ் செய்தனர். நல்ல புத்தகங்களை வாசித்தனர். காலம் போகப்போக மற்றும் சில புண்ணிய ஸ்திரிகள் அவர்களைப் பின்பற்றத் தொடங்கினார்கள். அவர்களுள் முக்கியமானவள் கிறீஸ்தீனா என்ற புத்தியுள்ள ஓர் பெண்பிள்ளையாம். அவர்களுடைய புண்ணிய நடக்கையையும் தேவ பத்தியையும் அறிந்த வண. கார்சியா சுவாமியார் அவர்களைத் துறவற சீவியத்தில் நடத்தும்படி 1866-ம் ஆண்டு ஓர் ஒழுங்குமுறை செய்து கொடுத்தார். அதுதொட்டு அவர்கள் இல்லறத்தினரின் உடைகளைவிட்டு துறவறத்தார்போல் கறுப்பு உடை தரித்து அதே நிற மேற்போர்வையால் சிரசை மூடிக்கொண்டார்கள். துவக்கத்திலிருந்து ஹெலேனா அவர்களோடு கூடிப் புழங்கியபோதிலும் அவர்களுடைய கூட்டத்துக்கு உடனே தானே சேரவில்லை. வணக்கத்துக்குரிய கார்சியா சுவாமியார் தேர்ந்த ஆசிரியராகையால் அவளைத் துறவற சீவியம் நடத்தும்படி தூண்டாமல் சருவேசுரன் நியமித்த நேரம் வரும்வரையும் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார். அவர் அவளுக்குத் தியானம் செய்யும் முறையைப் படிப்பித்து மரணத்தைப்பற்றியும், உலக சுகபோகங்களின் நிலையின்மையைப் பற்றியும் தியானம்பண்ண நியமித்தார். பத்தியுள்ள கிறீஸ்தீனாள் அவளுக்கு உதவியாயிருந்து பெற்றோர் உறவுமுறையாரைவிட்டுப் பிரியும் வழியை விளக்கிக் கொடுத்தாள். இதுதொட்டு ஹெலேனா கொஞ்சம் கொஞ்சமாகப் புண்ணிய வழியில் பயின்று வந்தாள்.

ஒருநாள் அவள் மோட்சத்தைப் பற்றியும், நரகத்தைப்பற்றியும் தியானம் செய்யும்போது மனதுக்குள் இவ்வகையான ஓர் சத்தங்கேட்டது. "நீ என்னிலும் உன் பெற்றாரிலும் ஆக நல்ல பாகத்தைத் தெரிந்துகொள். தெரிந்துகொள்ளவேண்டியது எதுவென்று நன்றாய் ஆராய்ந்துபார்" என்பதாம். இதுதொட்டு அவள் மனதுக்குள் பெரும் யுத்தம் உண்டானது. உலக சுகபோகத்தில் சார்புள்ளவளாய் இருந்தபோதிலும் தன் சகோதரன்

விவாகம் செய்தபின் அவனுக்குண்டான தொந்தரவைக் கண்டு விவாக சீவியத்தில் வெறுப்புக்கொண்டாள். ஆயினும் தாய் தந்தையரின் நோக்கம் இதற்கு மாறாயிருந்தது. அவர்களுடைய உதவியால் தைரியம் பெற்ற கலியாண தரகன் அவளைக் குறிப்பு வைத்து ஊரிலுள்ள வாலிபர் அவள்மேல் நேசம்வைக்கத் தூண்டினான். ஆனால் அவளுடைய நன்னடக்கையை அறிந்த வாலிபர் அவளை இல்லாளாக்கும் நோக்கமாக வார்த்தையாலாவது எழுத்தாலாவது யாதொரு அடையாளமும் காட்டவில்லை. அவளுடைய மூத்த சகோதரன் இதைப்பற்றி அதிக கோபங்கொண்டு நாங்கள் சொல்லுகிறபடி நீ விவாகம் செய்யாதிருந்தால் உன்னை வெடிவைத்துக் கொல்லுவோம் என்றான். அவளின் ஒரே மறுமொழி: "எதுவாயினும் நல்லது, எனக்குப் பறவாயில்லை. என் நோக்கத்தை நான் மாற்றுவதில்லை" என்பதாம். புண்ணிய சாங்கோபாங்க வழியில் நடப்பவர்கள் செய்யவேண்டிய முதல் வேலை நன்னடக்கையையுடைத்தாய் இருப்பதாம். அதாவது பாவத்திலின்றும், பாவப்பற்றுதலினின்றும் நீங்கியிருப்பதாம். இதற்கு உதவியாயிருப்பது நாளாந்தம் தன் ஆத்தும அந்தஸ்தைப் பற்றிச் சோதனைசெய்து பார்த்தலாகையால் ஹெலேனு நாள்தோறும் காலை மாலை இரண்டுவேளை தன் குணநடையைப்பற்றி நேர்மையுள்ள மனதோடு சோதித்துப்பார்த்தாள். சகல துர்க்குணம், மதியீனங்களை மனதிலிருந்து நீங்கிவிடத் தெண்டித்ததோடு தேவ நேசத்தில் விர்த்திக்கவும் அதிகமாய் முயற்சித்தாள். அவளுடைய பெலத்த துர்க்குணமாய் இருந்தது முற்கோபம். (சடுதியாய்க் கோபித்தலாம்.) ஆகையால் அதை அடக்க வரங்கேட்டுச் சருவேசுரனை மன்றாடினாள். இவ்வாறு அவள் உலக ஆசையை விட்டு மோக ஆசாபாசத்தை அடக்கிப் பாவக்கட்டினின்று நீங்கிப் பாவதோஷத்திற் சுத்தமாகி யேசுநாதர்பேரில் நேச அக்கினியாற் பற்றியெரியப் பிரயாசப்படும்போது: "நீ என் உரிமையை அறி" என்ற சத்தம் ஒருநாள் அவள் மனதுள் சப்தித்தது. யேசுநாதசுவாமியின் உரிமை யாதென்று ஆராய்ந்து பார்த்து அது அவருடைய திருப்பாடுகளென அவள் எண்ணிக்கொண்டாள். இதற்கு இரண்டு வருடங்களின்பின் அதாவது 1868-ம் ஆண்டில் ஹெலேனு வணக்கத்துக்குரிய கார்சியா சுவாமியார் ஏற்படுத்திய புண்ணிய சபையிலுட்பட்டாள். அக்காலத்தில் அவளுடைய ஆத்தும அந்தஸ்தை அந்தச் சுவாமியார் இவ்வாறு விபரிக்கிறார். தொந்தரவையிட்டாவது அவ்வளுடைய சகோதரனால் கிடைத்த கடும் தண்டனைகளைப்பற்றியாவது அவள் அலட்டரியப் படவில்லை. வீட்டில் கிடைத்த துன்பத்தின் அளவுக்கு அவளுடைய பக்தித்

துணிவு அதிகரித்தது. தன்னை வெறுத்து உலகம் மதிக்கும் யாவையும் அருவருத்தாள். பாடசாலைக்கு ஒருபோதும் போகாவிட்டாலும் ஏனைய கன்னிகை சகோதரிகளின் உதவியால வாசிக்கக் கற்றுக்கொண்டாள். இப்போது ஞானவாசிப்புத்தகங்கள் வாசிக்கக் கூடுமாயினும் எழுத அறியாள். அவள் புதுநன்மை வாங்கின நாள்தொடக்கம் அடிக்கடி அந்தச் சீவிய அப்பத்தை உட்கொண்டு திருப்தியடைந்தாள். அவளுடைய வயதுக்குரிய பெண்பிள்ளைகள் வழக்கமாய் அணியும் ஆபரணங்களை விலக்கினாள். யேசுநாதசுவாமியை நேசிக்கும் ஆசை நாளுக்கு நாள் அதிகமதிகமாய் அவளில் விளங்கினது. அவளுடைய ஆத்தும குருவானவர் அவளுக்கு நமது பரிசுத்த வேதத்தின் வணக்கத்துக்குரிய சத்தியங்களைப்பற்றித் தியானம் செய்யும் முறையை அதாவது அர்ச்சியசிஷ்டர்களின் ஒழுக்க முறையை விளக்கிக்கொடுத்தார். இந்தப் புண்ணிய நடக்கையில் அவள் எவ்வளவு கெதியாய்ப் பழகினாளென்றால் அவளோடிருந்தவர்களுக்கு முதலாய் அவள் முன்மாதிரிகையானாள் (நாட்குறிப்புப் புத்தகம்.)

1869-ம் வருஷத்தில் முகடுதூங்கி நாகம் ஒன்று (மாபில நாகம்) அவளுடைய காலின் பெருவிரலைத் தீண்டியபடியால் அவள் சாகுந்தருவாயில் இருந்தபோதும் மந்திரித்த அவுடதம் எண்ணெய் யாதொன்றையும் நான் செத்தாலும் தொடேன் என்று உறுதியாய்ச் சொல்லிக்கொண்டிருந்தாள். அவஸ்தைப்பூசுதல் பெற்ற சில நாட்களுள் அவளுக்குப் பூரண சுகம் கிடைத்தது.

**கல்வாரித் தரிசனம் :**

1870-ம் ஆண்டு தொடக்கம் ஹெலேனாவின் சீவியம் நூதன தன்மையுடையது. அவள் மனதிலிருந்த அமைதி அடிக்கடி அற்றுப்போயிற்று. பயங்கரமான அசுத்த எண்ணங்களும் தன் ஆத்தும ஈடேற்றத்தைப்பற்றிய சந்தேகங்களும் அலைகள்போல் எழும்பின. வானமும் பூமியும் பெரும் அந்தகாரத்தால் மூடியிருக்கையில் மனுஷ உலகத்தில் வரும் அச்சத்தைப்போல் பெரும் அச்சம் அவள் இருதயத்தை மூடிக்கொண்டது. துக்கமிகுதியால் கடவுளைப்பார்த்து வேண்டிக்கொண்டாள். அவளுடைய ஆத்தும வேதனை அதிகரித்திருக்கும்போது ஒருநாள் யேசுநாதர் அவளுடைய இருதய நேத்திரங்களுக்குத் தோன்றி அவளைத் தேற்றி, நீ பிசாசினால் துன்புறுத்தப்படும்போதும் சந்தேக வரட்சியாய்க் கலதியடைந்தபோதும் நாம் உனக்குச் சமீபமாய் இருந்தோம். இனிமேலும் உன் துன்பங்களில் சமீபமாய் இருப்போம் என்று மொழிந்தார். (நாட்குறிப்பு, 1870-ம் ஆண்டு ஆவணி 14-ந் உ)

திரும்பவும் யேசுநாதர் ஞானவிதமாய் மனதில் காணப்பட்டு அவளை விலையேறப்பெற்ற ஆபரணங்களால் அலங்கரித்து அவள் சிரசில் பூமுடி வைத்து அவளுக்கு வாதை வேதனை அனுபவிக்க வருமென்றும் அவள் தம்முடைய திருப்பாடுகளில் பங்குபற்றுகிறவளாக வேண்டுமென்றும் அறிவித்தார். (முந்திய குறிப்பு, புரட்டாசி 11-ந் திகதி.)

அதன்பின் அவளுக்குக் கொடிய ஓர் காய்ச்சலுண்டாகி கைகால் வழங்காமல் தொண்டை வீங்கி சிலவேளைகளில் அறிவு கெட்டுப்போய்க் கடும் வேதனை அனுபவித்தாள். அவள் மரண அவஸ்தையாய் இருக்கிறாளென்று அனேகர் எண்ணினார்கள். ஆயினும் அவள் சிறிதும் முறைப்படாமல் யாவற்றையும் பொறுமையாய் அனுபவித்துச் சருவேசுரனுக்குப் பிரிய பலியாக அதை ஒப்புக்கொடுத்தாள். தேவ நேசத்தால் அவளுடைய ஆத்துமம் சந்தோஷப்படும்போது நரகவாசியான பிசாசு பல உபாயங்களால் அவளை ஏய்த்துக் கெடுக்க முயற்சித்தது. ஒருமுறை அது அவளுக்கு ஓர் மோதிரத்தைக் காட்டி: "நீ இதை அணிந்துகொண்டு எனக்கு உரிமையாகக்கடவாய்" என மிக வேண்டுதலாய்க் கேட்டது. அந்த உபாயம் வீணானபோது அது அவளை நன்றாய் அடித்துவிட்டு ஓடிப்போனது. (அதே குறிப்பு, ஐப்பசி 4-ந் உ)

ஹெலேனாவோடு கூடி வாழ்ந்தவர்களுள் அந்நாட்களில் பேயின் மாயைக்ககப்பட்ட ஓர் கள்ளத் துறவி இருந்தாள். அவள் தேவ தரிசனத்தைப்பற்றியும், விசேஷ வரத்தைப்பற்றியும் பொய்க்கதை கட்டி வணக்கத்துக்குரிய கார்சியா சுவாமியாரையும் மற்றக் கன்னிகைகளையும் அணுப்ப முயற்சித்தாள். ஹெலேனாவுக்குத் திருக்காய அடையாளம் கிடைத்ததை அறிந்தபோது அவளுக்கும் அவ்வகை வரம் கிடைத்ததெனக் காட்டும்படி தன் கை கால்களில் காயம் உண்டுபண்ணிக்கொண்டாள். அவளுடைய கபடச் செயலைப்பற்றிக் கார்சியா சுவாமியார் தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இதற்குச் சிலநாட்களின் பின்பு அவள் தியானத்தில் இருக்கும்போது யேசுநாதசுவாமி அவளைப் பார்த்துத் தமது திவ்விய இருதயத்தைக் காட்டி: "என் உரிமையை நீ அனுபவி" எனச் சொல்லி அதை முத்தஞ் செய்யக் கட்டளையிட்டார் அவள் மிகப் பயபத்தியோடு அவ்வாறு செய்தாள். இவ்விஷயம் அவளுடைய சரீரக் கண்களுக்குத் தோன்றாவிட்டாலும் அன்றுதொட்டு அவளுடைய இருதயம் ஓர் ஆயுதத்தால் குற்றப்பட்டதுபோலவும், தலையில் முள்முடி இறுக்கினதுபோலவும் உணர்ந்தாள். இதனால் பொறுக்கமுடியாத சரீர வேதனை உண்டாயிற்று. (ஐப்பசி 12-ந் உ)

சிலநாட் கழிந்தபின் நெற்றியிலும் வலதுபக்க விலாவிலும் இரத்தத்துளிகள் காணப்பட்டன. ஆயினும் இவ்வடையாளங்கள் பேய் மாயத்தால் உண்டாயினவோவென்று சந்தேகித்து அச்சமுற்றாள். ஏனெனில் யேசுநாதரின் பரிசுத்த உரிமை அவருடைய திருப்பாடுகள் என்பதை அவள் இன்னும் விளங்கவில்லை. (கார்த்திகை 1-ந்.)

கார்த்திகை மாதம் 8-ந் திகதி கோவிலில் இருந்து வீட்டுக்குப் போகையில் ஓர் பாம்பு திரும்பவும் அவளுடைய வலது காலைத் தீண்டியதால் அவள் மூர்ச்சையுற்று மரணபத்தில் இருந்தாள். ஆனால் அவஸ்தைப் பூசுதல் பெற்றபின் ஒரு நாளிலே பூரண சுகம் கிடைத்தது. அப்போது அவள் இந்தத் தரிசனத்தைக் கண்டாள். அதாவது: யேசுநாதர் ஓர் இராசாவைப்போலிருந்து அவளை வதைத்த பிசாசை ஓடும்படி கட்டளையிட்டார். பின் அவளைக் கையால் தூக்கி நரக மிருகத்தைக் காலால் மிதிக்க வரங் கொடுத்தபோது அது அவளை விட்டோடிப்போக உத்தரவு கேட்டுக் கெஞ்சியது. (கார்த்திகை 20.) இவ்வகையாய் யேசுநாத சுவாமி தமது திருப்பாடுகளுக்கு அவளைப் பங்காளியாக்குமுன் மதுரமான காட்சிகளாலும் பெலப்படுத்தி ஆறுதல் அளித்தார்.

**யேசுநாதரின் உரிமை:**

1870-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதி மாசில்லா மாதாவின் திருநாள் பூசையின்பின் ஹெலேனா வீட்டுக்குப் போனவுடனே நல்ல ஓர் உணர்ச்சி அவளுக்கு உண்டானது. அவளுடைய தோளைப் பெரும் பாரத்தால் அமுக்கியது போலவும், எலும்புகளை முறித்ததுபோலவும் உணர்ந்தாள். அதனால் உண்டான வேதனை நிமித்தம் அறிவு குறைந்து விழுந்தது. அவ்வேளை யேசுநாதர் அவள் மனதில் தரிசனமாகி இரண்டு அங்குல நீளமுள்ள மூன்று ஆணிகளைக் காட்டி அதை முத்தமிடக் கட்டளையிட்டு: "என் உரிமையை நீ இவ்வுலகில் அடைந்தபின் மோட்சத்திலும் அதை அநுபவி" யென்று மொழிந்தார். இதற்கு எட்டு நாளைக்குப் பிறகு ஆண்டவர் சிலுவையையும் அவளுக்குக் காட்டினார். இவ் அடையாளங்கள் வழியாய் அவள் விளங்கியது யாதெனில் துன்பப்படுதல் அவளுக்கு நியமம் என்பதாம். (காட்குறிப்பு) இத்திருப்பாடுகளை வணக்கத்துக்குரிய கார்சியா சுவாமியாரே எங்களுக்கு விபரித்துத் தந்திருக்கிறார். இவ்வருடம் 1870-ம் ஆண்டு மார்கழி மாதந் தொட்டு, யேசுநாதரின் திருப்பாடுகளோடு சம்பந்தமுள்ளதெனச் சொல்லக்கூடிய கடும் வேதனைகளை அவள் அநுபவித்தாள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மூன்று முறை சிலு

வையில் அறையுண்டாள். இந்த அற்புதம் நடந்தவகை பின்வருமாறு :- வியாழக்கிழமை பின்னேரம் 7 மணிக்குக் கண்ணுக்குத் தோற்றாத ஓர் வல்லமையால் அவள் விழுத்தப்பட்டு, கை கால் கட்டுண்ட பின் இரு முறை 20 நிமிஷமளவு கசைகளால் அடிபடுவாள். அதன்பின் சிலவேளை $\frac{1}{4}$ மணியளவு பரவசமாயிருப்பாள். வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் பாரமான ஓர் சிலுவை சுமத்தப்பட்டது போல் சடுதியாய் நிலத்தில் விழுந்து $\frac{1}{2}$ மணி நேரமளவு எழும்பமுடியாமல் முகங்குப்புற இருப்பாள். அவள் மேற் சுமத்தப்பட்ட பாரம் எவ்வளவு அதிகமென்பதை அவளைத் தூக்க முயற்சித்தவர்களுக்கு முதலாய் நன்றாய்த் தெரிந்தது. எழும்பியபின் இரண்டு மணியளவாகப் புத்தகம் வாசிக்கவும் இயலும். முன்னேரம் 9 மணிக்குச் சடுதியாய்த் திரும்பவும் கீழே விழுத்தப்பட்டு ஓர் சிலுவை மீது கிடத்திக் கை கால்களில் ஆணியறைந்ததுபோல் உடல் நிமிர்ந்திருப்பாள். இவ்வேளைகளில் மரியாதைக்குறைவான எந்த அடையாளமும் அவளிடம் காணப்படா. சிலுவையில் அறையுண்டு எவ்வளவு நேரம் இருப்பாளென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. அந்த நேர அளவு கூடிக்குறைந்திருக்கும். அவள் பரவசமான வேளைகளில் வேதனைப்பட்டது கொஞ்சநேரம் மாத்திரம்தான். ஆனால் அந்நேரம் வெகுவாய் வேதனைப்படுவாள். இரண்டாம் முறை சிலுவையில் அறைபடுவது மத்தியானம் 12 மணிக்கும் மூன்றும் முறை பின்னேரம் 3 மணிக்குமாம். 1870-ம் ஆண்டு மார்கழி மாதத்திலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முன்சொன்னபடி அற்புதவிதமாய்ச் சிலுவையில் அறைபட்டாளாயினும் அக்காலத்தில் கை கால்களால் இரத்தம் வடிந்தோடவில்லை. துவக்கத்திலிருந்து வலதுபுற விலாவால் மாத்திரம் இரத்தம் வடிந்தது. 1871-ம் ஆண்டு பெரிய வெள்ளிக்கிழமை தொடங்கிக் கைகளாலும் இரத்தம் வடியத்தொடங்கியது. இதுவும்/ஒரே வகையாய் நடக்கவில்லை. சிலவேளை கைகளிலிருந்து மாத்திரம் வடியும். சிலவேளை கைகளாலும் கால்களாலும் வடியும். சிலவேளை முதலாம் இரண்டாம் முறைகளில் மாத்திரம் வடியும். சிலவேளை மூன்றும் முறையில் வடியும். இந்த அற்புதமான சிலுவையில் அறைபடுதல் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் நடந்தாலும் ஆத்தும குருவானவராவது மேற்றிராணியாண்டவராவது ஓர் குறித்த காலத்துள் அவ்வாறு நடக்க வேண்டாமென்று கட்டளை கொடுத்தபோது திருப்பாடுகளின் வெளியடையாளம் மறைந்துபோம். ஒரு மாதமளவு அவள்பட்ட வேதனையை அவளுடைய ஆத்தும குருவானவரும் அவ்வேளைகளில் அவளைப் பராமரிக்கும்படி நியமனம் பெற்ற துணைச் சகோதரியும் மாத்திரம்

அறிந்திருந்தார்கள். இந்தத் துணைச் சகோதரி ஞானமயமான, அன்பு நிறைந்த ஆத்தும காரியங்கள் மட்டில் போதிய அறிவும் அனுபவமுமுள்ள ஒருத்தியாம். ஹெலேனாவின் தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் இதைப்பற்றி அறியாதிருந்தார்கள். ஆயினும் 1871-ம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் அவள் நாள்தோறும் மூன்று முறை சிலுவையில் அறைபட்டு வேதனை அனுபவித்தபடியால் யாதொரு உணவும் உண்ண முடியாமல் போனபோது மாத்திரம் அவளுடைய இரகசியம் அவர்களுக்கு வெளியானது. அவள் ஏதோ ஒரு வியாதியால் வருந்துகிறாள் என்று துவக்கத்தில் அவர்கள் எண்ணி அவளுக்கு வைத்தியம் செய்யவும் மருந்து கொடுக்கவும் முயற்சித்தார்கள். ஆனால் அவளுடைய மெய்யான நடப்பை அறிந்தபோது பயந்து அவளுக்குத் தொந்தரவு செய்யாது துணைச் சகோதரிகளாலும் மற்றையவர்களாலும் தக்க பராமரிப்புப் பெற இடங்கொடுத்தார்கள். இவ்வகையான அற்புத சம்பவம் ஊரில் நாட்டில் பிரசித்தமாதல் தடுக்கமுடியாதபடியால் ஊரார் இதைப்பற்றிப் பலவகைக் கதைகள் பேசினார்கள். தாங்களே கண்டு தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொள்ள அநேகர் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய பேச்சுவார்த்தை சண்டை சச்சரவுகளை நிறுத்தவும், ஹெலேனாவின் கீழ்ப்படிதலைச் சோதிக்கவும், மூன்று கிழமை அவள் திருப்பாடுகளின் வெளியடையாளங்களாலும் பரவசமாதலாலும் நீங்கியிருக்கும்படி ஆத்தும குருவானவர் அவளுக்குக் கட்டளையிட்டார். இந்தக் கட்டளைக்கு அவள் முழுதும் கீழ்ப்படிந்தாள். இந்த மூன்று கிழமைகளும் அவள் ஒரு உணவும் அருந்தாது இருந்தபோதிலும் பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் படிப்பிக்கும்படியாய் ஒரு கட்டைதூரம் போளவத்தைக்குக் கால் நடையாய் நடந்து வந்தாள்.

கட்டளைக்கு அமைந்த கால அளவு முடிந்தவுடனே முன்போல வெளி அடையாளங்களோடு வியாழன் வெள்ளி நாட்களில் வேதனை அனுபவித்தாள். ஆகமன காலத்தில் மூன்று வாரம் நாளாந்தம் சிலுவையிலே அறைபடும் கொடிய வேதனையை அனுபவித்தாள். மேலும் எல்லா முறைகளிலும் காயங்களால் இரத்தம் ஓடின. அவ்வருடம் நத்தார் திருநாளுக்கு முந்தின தினம் தனக்குச் சுகம் இருந்தபடியாலும் அன்று வியாழக்கிழமை அல்லாததால் திருப்பாடுகளின் யாதொரு குறிப்பாவது இல்லாதிருந்தபடியாலும் நேரகாலத்தோடு நடுச்சாமம் 12 மணிப் பூசைக்குக் கோவிலுக்குப் போனாள். இரவு 10 மணியளவில் அவளுடைய கை கால் யாதொரு அந்தரங்க வல்லமையால் கட்டப்பட்டதாகத் தோன்றியது. அவளுடைய விசுவாசமுள்ள துணைச் சகோதரி

இதைக் கண்டு உடனே அவளைச் சங்கிறிஸ்தி அறைக்குக் கூட்டிப் போனாள். இவ்விடத்தில் அவள் சிலுவையில் அறைபட்டுச் சகல வேதனைகளையும் அனுபவித்தாள். காயங்களால் இரத்தத் தாரை வடிந்தோடின. அன்று பூசைகாண வெகு சனம் வந்திருந்தபடியால் ஹெலேனா அவர்களுக்கு மறைந்து இரகசியமாயிருத்தல் சற்றும் இயலாது போயிற்று. மேலும் அவள் மற்றைய நாட்களிலும் பார்க்க அதிக நேரம் அதாவது இரா 12 மணிப் பூசைவரையும் பாவசமாயிருந்தாள். ஆயினும் திவ்விய பூசை காணவந்தாள். இதன் பிறகு இலங்கையில் வெகுதூரமான இடங்களிலிருந்து முதலாய்ச் சனங்கள் அவளைக்காணக் கோணவிலுக்கு வந்தார்கள். (நாட்குறிப்பு.)

## சம்பவம் பிரசித்தமாதல் :

மெய்யான சருவேசுரனும் மெய்யான மனுஷனுமாகிய யேசுநாதர் நமது இரட்சணியத்துக்காகப் பட்ட திருப்பாடுகளின் அடையாளம் யாதொரு மனுஷனிடம் காணப்படுதல் மனுஷ இருதயம் துடிக்கக்கூடிய ஓர் பிரலாப காட்சியாம். இவ்வகைக் காட்சி உலகில் பிரத்தியட்சமாதல் மிக அருமை. திருச்சபையின் சரித்திர சம்பந்தமான பிரசுரங்களில் காணப்படுகிறபடி இவ்வகையான தேவவரம் முதன்முதல் அடையக் கிருபை பெற்றவர் அர்ச்சியசிஷ்ட ஐந்து காயப் பிராஞ்சீஸ் அசிசியாராம். அதன் பின்பு முந்நூற்று இருபத்தொரு பேருக்கு இந்த விசேஷவரம் தேவ கிருபையால் கிடைத்ததென்று அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் (Goa) கோவா பட்டணத்திலுள்ள அர்ச். மோனிக்கம்மாள் மடத்தில் வசித்து 1683-ம் ஆண்டில் பரலோகம் சென்ற பத்தியுள்ள ஓர் கன்னியாஸ்திரிக்கும் இந்த மேலான வரம் கிடைத்திருந்தது. (History of Catholic Church in India by M. D'sa. Vol. I. P. 224) தேவ வரத்தால் இவ்வாறு உண்டாகும் காயங்கள், ஏனைய தேகக் கூறுபாட்டால், அல்லது யாதொரு வெளியரங்க காரணத்தால் உண்டான காயங்கள்போல் அழுகி, சீழ்கட்டித் துர்நாற்றம் வீசுவதில்லை. மேலும் மருந்துகளின் வல்லமையாலல்ல, தேவ கிருபையாலேயே அவை சொஸ்தமாகும். இவ்வகையான சம்பவங்களைப்பற்றி வைத்தியர்களும் வேதபண்டிதர்களும் கேட்கும் வினாக்கள் பல. அவற்றை விளக்குதல் இப்புத்தகத்தின் தரத்துக்கு மிஞ்சியது. ஆயினும் இதையிட்டு ஓர் விஷயம் மாத்திரம் மனதிற் கொள்ள வேண்டும். இவ்வகை நூதன அற்புத சம்பவங்கள் மட்டில் திருச்

சபை அதிகாரிகள் மிக ஆராய்வோடு வெகு சாக்கிரதையாய் நடந்து கொள்வார்கள். இதைத் தீர்மானித்தல் தவறாத திருச்சபைக்கு மாத்திரம் உரிய வேலையாகும்.

கோனாவில் சம்பவம் பரம்பப் பரம்ப இலங்கையின் நாலா பக்கத்திலுமிருந்து சனங்கள் கும்பல் கும்பலாய் ஹெலேனாவைப் பார்க்க வந்தார்கள். விசேஷமாய் வியாழன் வெள்ளிக்கிழமைகளில் சனக் கூட்டம் ஹெலேனா வசித்த சிறு வீட்டைச்சுற்றிய நிலத்தில் மிக நெருக்கமாய்க் கூடின. இதைத் தடுக்க அவளுடைய தாய் தந்தையராலும் சகோதரனாலும் கூடாமற்போயிற்று. ஆகையால் வண. கார்சியா சுவாமியார் அந்த இரு தினங்களிலும் அவள் கோயிலுக்குச் சமீபமாயிருந்த ஒரு வீட்டில் தங்கியிருக்க இடங்கொடுத்தார். அப்போதும் சனங்களின் வருகை குறையவில்லை. விஷயம் அதிக பாரதூரமாய்ப் போகமுன் 1871-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி கார்சியா சுவாமியார், அதிவந்தனைக்குரிய கிறீஸ்தோப்பர் பொஞ்சியன், ஓ. எம். ஐ. மேற்றிராணியாண்டவருக்கு ஓர் கடிதம் எழுதி இதனை அறிவித்தார். மேலும் குறித்த இருநாட்களிலும் ஹெலேனாவைப் பார்க்கத் தடைபண்ணியிருப்பதாகச் சூழவுள்ள மிசாங்களின் கட்டளைக் குருமார் வழியாய்ச் சனங்களுக்கு அறிவித்தார். கோனாவிலுக்கு வந்தவர்களில் வெகுபேர் பத்தியுள்ளவர்களானாலும் அற்புதம்காணும் அதிக ஆசை அவர்களில் மும்முரமாயிருந்தது. ஆதலால் சிலவேளைகளில் ஒழுங்கு முறைகளுக்காவது பெரியோர்களின் கட்டளைகளுக்காவது அவர்கள் அடங்கவில்லை. அதிசயம் பார்க்கும் ஆவலால் தூண்டப்பட்ட மூவாயிரத்துக்கு அதிகம் பேரைக்கொண்ட ஓர் கூட்டம் சிறிய ஓர் குடிசையை வளைத்துக் கொண்டால் அங்கு உண்டாகும், பேச்சு வார்த்தை சண்டை சச்சரவு முதலிய ஒழுங்கீன செய்கை எவ்வளவென்பது சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் ஹெலேனாவுடைய திருப்பாடுகளைக் கண்டேழுர்க்கமுள்ள பாவிகள் பலருடைய இருதயம் முதலாய் மெழுகுபோல் உருகியது. ஒருகாலம் அவளை வதைத்த மூத்த சகோதரன் அவளுடைய அடக்கமான சீவியத்தையும் இந்த அற்புதத்தையும் கண்டு பயந்து கலங்கி நல்ல சீவியம் சீவிக்கத் தீர்மானித்துக் கொண்டான். சூழவுள்ள ஊர்களில் வசித்த பிறசமயத்தவர் பலரும் பொய்த் தெய்வ வழிபாடுகளை விட்டுச் சத்திய வேதத்தில் உட்பட்டார்கள்.

போளவத்தையின் அற்புத சம்பவத்தையிட்டுச் சமாசாரப் பத்திரிகைகளில் பல தர்க்கங்கள் நடந்தன. சிலர் அவள் ஓர்கப்புறாளையின் மகள் மாயவித்தைக்காரி, பேயாவேசம் கொண்டவள்

என்று சொன்னார்கள். பதிதர் இது ரோமான் கத்தோலிக்கரின்
புத்தியற்ற அற்புதம். அவர்களுடைய குருக்களின் மாயதந்திர
மென்று பழைய பாட்டையே பாடினர். ஆயினும் திருச்சபை அதி
காரிகள் பொதுவான ஓர் விசாரணை நடத்தும் வரையும் மேற்
கூறிய சம்பவத்தைப்பற்றி யாதொன்றும் தீர்மானிக்கவில்லை.
அது மாத்திரமன்று, ஓர் தீர்மானம் செய்யும்வரையும் ஹெலேனா
வைப் பார்ப்பதற்காகப் போனவத்தைக்குப் போவதையும் அவ
ளைப்பற்றிய சம்பவம் மெய்யாகவே தேவ வல்லமையால் நடக்கின்
றது எனச் சொல்வதையும் திருத்தும்படி யாழ்ப்பாண மேற்றி
ராணியாண்டவர் 1872-ம் வருடம் ஆவணி மாதம் 18-ந் திகதி
ஓர் நிருபம் விடுத்தார்.

பொறுமையற்ற ஊரார் நடுவில் இவ்வகைக் -காத்திரமிக்க
விஷயத்தை விசாரணை செய்தல் தகுதியல்ல என எண்ணிய
மேற்றிராணியாண்டவர் அவளையும் அவள் துணைவியையும் வண.
கார்சியா சுவாமியாரையும் பங்குனி மாதம் 3-ந் திகதி குருநாக
லுக்கு வரும்படி கட்டளையிட்டார். அவளுடைய தாய் தந்தை
யர் இதற்கு வெறுப்புற்று எதிரிடை செய்தபோதிலும் ஹெலேனா
உடனே சிரேஷ்டரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள். குருநாகலி
லுள்ள திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் அவள் இருக்கும்
போது முன்போலவே திருப்பாடுகள் சம்பவித்தன. அவ்விடத்
தில் அவளைப்பற்றி நடத்தப்பட்ட விசாரணை இருவகையானது.
சரீர இயற்கை சம்பந்தமான விஷயங்களின் விசாரணை குருநாகற்
பிரிவின் பிரதான வைத்தியராய் எம். டீ. பட்டம் பெற்றிருந்த
டயஸ் வைத்தியரால் நடத்தப்பெற்றது. அவர் கத்தோலிக்க
சபையைச் சேராத நவீனசாஸ்திர பண்டிதராகையால் ஹெலேனா
வின் விஷயத்தில் பட்சபாதம் காட்டினாரென்று சற்றேனும் கருத
இடமில்லை. தேவ சாஸ்திர சம்பந்தமான விசாரணையை அதி
வந்தனைக்குரிய மேற்றிராணியாண்டவர் தாமே மிக நுணுக்கமாய்
நடத்தினார்.

### வைத்தியரின் அறிக்கை :

வைத்தியர் மூன்று முறை அவளைப் பரிட்சித்து விசாரணை
நடத்தினார். முதன்முறைப் பரிட்சை 1872-ம் ஆண்டு பங்குனி
மாதம் 13-ந் திகதி நடத்தப்பட்டது. பரிட்சை விசாரணை அறிக்
கை சித்திரை மாதம் 9-ந் திகதி மேற்றிராணியாண்டவருக்கு ஒப்
பிக்கப்பட்டது. அதில் சிலவற்றை இங்கு சுருக்கிக் கூறுவோம்.
ஹெலேனாவின் கைகளில் உள்ளங்கை நடுவில் $\frac{3}{4}$ அங்குல நீளமும்

$\frac{1}{4}$ அங்குல அகலமுமான இரு காயங்கள் இருந்தன. அவற்றின் தோல் சுகப்பட்ட காயத்தின் தோல்போல் மிருதுவாய் சற்றுக் கறுப்பாய் இருந்தது. இத்தழும்புகளின் நடுவில் இரத்தம் கட்டியதனால் உண்டான $\frac{1}{2}$ அங்குல நீளம் $\frac{1}{4}$ அங்குல அகலமாய் வட்டமான சதையாகும். ஒவ்வொரு கையின் பின்பக்கத்திலும் உள்ளங்கைகளிலிருந்த தழும்பைப்போன்றதாய் அதற்குச் சரிநேராய்த் தழும்பு உண்டு. கைகளிலுள்ள காயங்களைப்போன்று நான்கு காயங்கள் பாதங்களிலும் இருந்தன. இவை கைகளின் காயங்களைப்பார்க்கிலும் சற்றுப் பெரிதாக மற்றும் அடையாளங்கள் அவைகளுக்குச் சமானமுமாம். வலதுபக்க விலாவில் பயோதரத்துக்குச் சற்றுக் கீழே முதுகுப்பக்கத்துக்குக் குறுக்காய் இரண்டு அங்குல நீளமான ஓர் தழும்பு. இதன் தோல் வெடித்ததுபோல் இருந்தது. அது $\frac{1}{2}$ அங்குல நீளமுள்ள கறுத்த மிருதுவான தோலால் மூடப்பட்டிருந்தது.

அடுத்த நாள் திரும்பவும் நான் ஹெலேனாவைப் பரீட்சித்துப் பார்த்தேன். பின்னேரம் 3 மணியளவில் அவள் மெத்த அமைதியாய் உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது அவளுடைய கை கால்களால் இரத்தம் வடியவில்லை. நான் அவளுடைய அறைக்கு அடுத்த அறையிலேயே இருந்தேன். அறையிரண்டுக்கும் இடையிலுள்ள ஒரே கதவு திறந்தபடியேயிருந்தது. $3\frac{1}{2}$ மணியளவில் ஹெலேனா அறிவு இழந்து மூர்ச்சையாய்ப் போகிறதாக அவளுடைய துணைச் சகோதரி சொன்னபடியால் உடனே நான் அவளிருந்த இடத்துக்குப் போனேன். கை கால் நீட்டினபடியே மல்லாக்காய் நிலத்தில் விழுந்திருந்தாள். விலாவிலிருந்து கைவரையும் இருந்ததூரம் 18 அங்குலம். உள்ளங்கையின் பின்பக்கம் தரையோடு இறுக்கப்பட்டிருந்தது. காலிரண்டும் சேர்ந்து (கிட்டி) வலது பாதத்தின் அடிப்பக்கம் இடது பாதத்தின் மேலும் வலது பாதத்தின் குதி இடது பாதத்தோடு சேர்ந்தும் இருந்தது. உள்ளங்கையாலும் வலது பாதத்தின் மேற்பாகத்தாலும் இடது பாதத்தின் உள்பக்கத்தாலும் இரத்தம் ஓடியது. இரத்தம் புறப்பட்டது கை கால்களில் உள்ள காய்ந்த இரத்தக் குவியல்களாலாம். இரத்தம் கொஞ்சம் (அரைவாசி) கடுஞ்சிவப்பாயும் கொஞ்சம் (அரைவாசி) கடுங்கறுப்பாயுமிருந்தது. ஒவ்வொரு இடத்தாலும் வடிந்தோடிய இரத்தத்தின் அளவு ஒரு டிறும். ($\frac{1}{8}$ அவுன்சாகும்.) தொடக்கத்தில் அவளுக்குச் சற்று அறிவு இருந்தபோதிலும் சடுதியாய் அறிவு முற்றும் இல்லாது போயிற்று. கண்களிரண்டும் மூடப்பட்டிருந்தன. ஆயினும் அதிக சிரமமின்றிக் கண் இமையைத் திறந்தாள். கண்விழி மேற்பாகமாய்த் திரும்பியிருந்த

படியால் காணப்பட்டது வெள்ளைவிழி மாத்திரம்தான். மூச்சு வாங்குதலும் நாடியடிப்பும் ஒரு நிமிஷத்துக்கு 100 ஆகச் சற்று வேகமாயிருந்தது. பின்னேரம் 3 மணி 50 நிமிஷத்தில் அதாவது 20 நிமிஷத்துக்குப் பிறகு அவளுக்கு (படிப்படியாய்) மெதுவாய் கொஞ்சம் கொஞ்சமாக அறிவுவாக் கண்களைத் திறந்து (நூபுவர்) நான்கு பக்கமும் பார்த்து, காற்றுக் குறைவான ஓர் அறையில் இருப்பவளைப்போல் வாயால் காற்று ஊதத்தொடங்கினள். அதன்பின் இரு கைகளும் யாரொரு வல்லமையால் நிலத்தில் இறுக்கப்பட்டிருந்ததுபோல வெகு பிரயாசத்தோடு தூக்கினள். உடலையும் காலையும் சற்று அசைத்துக் கால்கள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருப்பதுபோல வருத்தத்தோடு அதையும் நீக்கிக் கொண்ட பிறகு அவள் சகோதரியினதும் துணைவியினதும் உதவியோடு எழும்பி உட்கார முயற்சித்தாள். உள்ளங்கையின் வெளிப்பக்கத்தாலும் இடது உள்ளங்காலாலும் இரத்தம் வடிந்ததையும் அவள் படுத்திருந்த பாய் இரத்தத்தால் சிவந்திருந்ததையும் நான் அப்போது பார்த்தேன். அவள் நிமிர்ந்து படுத்திருந்தபோது இவற்றைப் பரீட்சித்துப்பார்க்க எனக்குக் கிடைக்கவில்லை. இவ்வேளை அவளுடைய நெஞ்சாலும் தலையாலும் இரத்தம் ஓடவில்லை. அவள் பெலவீனமாய் இருந்தபடியால் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கேட்டாள்.

அதற்கு அடுத்தநாள் மூன்றும் முறையும் அவளைப் பரீட்சை செய்தேன். காலமே 7 மணிக்கு அவள் அறிவு மயங்கிப் போனாள். பொஞ்சியன் மேற்றிராணியாண்டவரோடு அவள் பேசிக்கொண்டிருக்கையில் நான் அங்குவரச் சற்றுநேரத்துக்கு முன்னே அவ்வாறு நடந்ததாக அவர் எனக்குச் சொன்னார். அவள் உணர்ச்சியற்று நிலத்தில் விழுந்து இடது பக்கத்துக்குக் கையிரண்டையும் நீட்டிக்கொண்டிருந்தாள். இடது கையின் மணிக்கட்டின்மேல் வலது கையின் மணிக்கட்டுச் சேர்ந்திருந்தது. காலிரண்டும் ஒன்றுக்கொன்று சமீபமாய்ச் சற்று முன்னாய் வளைந்திருந்தன. அவள் விழுந்த இடத்தில் இரத்தத்துளி ஒன்றிரண்டு காணப்பட்டது. தலையைச் சோதித்துப் பார்த்தபோது தலையில் மூன்றிடங்களில் இரத்தம் வடிகிறதைக் கண்டேன். அதில் நெற்றிப்பக்கத்தில் தலையின் நடுவே இரு இடங்களில் இரத்தம் கொஞ்சம் வடிந்தது. உச்சந் தலைக்குச் சற்றுக்கீழே வலது பக்கமாய் இரத்தம் பெருகிக் கழுத்துவரையும் வடிந்து ஓடியது. கையிரண்டையும் விலக்க முயற்சித்தபோது அவை இறுக்கமாய்ச் சேர்ந்திருந்தபடியால் அம்முயற்சியை நிறுத்த வேண்டியிருந்தது. இவ்வேளையில் கை கால்களால் நெஞ்சால் இரத்தம் வடியவில்லை.

இந்த நிலைமை 7 மணி 15 நிமிஷம் வரையும் அதாவது 15 நிமிஷம் இருந்தது. அதன்பின் அவள் படிப்படியாய் உணர்ச்சி பெற்று வருத்தத்தோடு இரு கையையும் நீக்கிக்கொண்டாள். இந்தப் பெண்பிள்ளையிடமாவது அவள் துணைவியிடமாவது யாதொரு ஏமாற்றமும் இருந்ததில்லையென்பது வெளிப்படை. (வைத்தியரின் அத்தாட்சிப்பத்திரம்) மேலே கூறப்பட்ட துக்க சம்பவத்துக்குப் பிறகு லூயிலேனுவின் முதுகில் கசை அடிகளுக்கு ஒப்பான அடையாளங்கள் பல இருந்தன என்று அக்காலம் குருநாகல் மடத்துக்கு முதலாளியாயிருந்த மரியஜோசப்பின் என்னும் சிரேஷ்ட தாயார் சாட்சி கூறியிருக்கிறாள். (Mission des. O.M.I. 1873 P. P. 389—391.)

## பரவசமும் தேவசம்பாஷணையும் :

திருப்பாடுகளின் வேளைகளில் அநேக முறை லூயிலேனு பரவசமாய் இருந்தாள். அவளுடைய பஞ்ச புலன்கள் அவ்வேளை இயற்கையாய் உணராதபடியால் உருவம், சத்தம், மணம், ருசி, பரிசம் முதலியவற்றால் உண்டாகும் அறிவு இருக்கவில்லை. ஆயினும் அவளுடைய சித்தசம்பந்தமான சக்திகளும், ஞாபகம், தீர்மானம், ரூபிகரம் முதலிய ஆத்தும சக்திகளும் வல்லமையுடையனவாய் இருந்தன. மூர்ச்சையாய் இருப்பவர்களின் பஞ்சேந்திரியங்களும் மனோதத்துவங்களும் வேலை செய்கிறதில்லை. ஆகையால் அவள் பரவசமானபோது சூழவுள்ளவர்கள் பேசுகிற, செய்கிற எதுவும் அவள் உணரவில்லை. அவளுடைய சரீரத்துக்குச் செய்யப்பட்ட ஓர் வேதனைதானும் அவளுக்கு விளங்கவில்லை. ஒரு நாள் அவள் பரவசத்திலிருக்கையில் மேலைத்தேச வைத்தியர் ஒருவர் அவளைச் சோதிக்கும்படி "அமோனியா" என்ற மிக்க காரமுள்ள மருந்துகொண்ட ஓர் சீலையை அவள் மூக்கில் வைத்துக் கொஞ்சநேரமாகியும் அவளுக்கு அறிவுவரவில்லை. அப்பொழுது வைத்தியர் அச்சீலையால் அவளுடைய மூக்கையும் வாயையும் மூடினார். அப்பொழுதும் உணர்ச்சியுண்டாகவில்லை. இதனால் கபடு, அணுப்பு சற்றும் அவளிடம் இருக்கதில்லை என அவர் ஒப்பித்தது மாத்திரமன்று, மருந்தின் காரம் உடலுக்கேறியதால் இரண்டுநாளாக மெத்த வருத்தப்பட்டாள். (நாட்குறிப்பு 1872-ம் வருஷம் தை௲-ந் திகதி) ஆயினும் இத்தன்மையான வேளைகளில் முதலாய்த் தன் ஆத்தும குருவானவராவது மேற்றிராணியாண்டவராவது ஓர் கட்டளை கொடுத்தால் உடனே அது அவளுக்கு விளங்கிவிடும். ஓர் முறை தேவசாஸ்திர சம்பந்தமாய் இந்தியாவில் கீர்த்தி பெற்றிலங்கிய வணக்கத்துக்குரிய (Gallo) கல்லோ,

எஸ். ஜே. என்னும் குருவானவர் ஹெலேனவைக் காணப் போள வத்தைக்கு வந்து திவ்விய பூசை செய்தபோது அவளுக்குத் திவ்விய நற்கருணை கொடுத்தார். அதற்குப் பிந்தின தினம் வெள்ளிக்கிழமையாதலால் சிலுவையில் அறைபடும் திருப்பாடுகளின் வேதனையை அவள் மூன்று முறை பட்டனுபவித்தாள். இதனை வணக்கத்துக்குரிய கார்சியா சுவாமியாரும், வணக்கத்துக்குரிய கல்லேர சுவாமியாரும் கண்டார்கள். அவள் பாவசமாய் இருக்கையில் அதை நீக்கிவிட கார்சியா சுவாமியார் கட்டளையிட்டார். அந்தக்ஷணமே வெளியாங்கமான யாதொரு உணர்ச்சியுமில்லாதிருந்த அவள் தன் ஆத்தும குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கண்திறந்து பார்த்தாள். (காட்குறிப்பு1871-ம் ஆண்டு ஐப்பசி 29-ந் திகதி) பரவசமாய் இருக்கும் வேளைகளில் சருவேசுரன் ஹெலேனவுக்கு அநேக விஷயங்களை வெளிப்படுத்தினார். அவள் சருவேசுரனுடன் மனதினால் சம்பாஷித்தாள். பரலோக வாசிகளோடும் பிரிய சம்பாஷணை செய்தாள். தியான நேரங்களில் இவ்வகையான பரலோக பிரசாதங்கள் அவளுக்கு ஏராளமாய்க் கிடைத்தன. ஆயினும் இவைகளைப்பற்றித் தன் ஆத்தும குருவுக்கும் மேற்றிராணியாண்டவருக்கும் ஒழிய வேறெவருக்காவது ஒரு வார்த்தையாவது அவள் சொல்லவில்லை. அரசனின் இரகசியத்தை மறைத்துக்கொள்வது நல்லது. ஆயினும் சருவேசுரனுடைய நற்கிரிகைகளைச் சொல்லுதலும் வெளிப்படுத்துதலும் ஆக நல்லது. (தோபியஸ் XII 7)

திருக்காய அடையாளம் அவளுக்குக்கிடைத்த முதன்முறை அது தேவ அருளால் கிடைத்ததோ அல்லது பிசாசின் தந்திரத்தால் உண்டான விபரீதமோவென்று அவள் சந்தேகப்பட்டு மனம் வருந்தி ஆண்டவரே! இது தேவரீரால் அல்லாமல் பிசாசின் மாயத்தால் உண்டானதாகில் என்னிலிருந்து உடனே நீங்கக் கடவது. இத்தகைய பாரதூரமான விஷயத்தைப் பெலவீனமுள்ள நான் எவ்வாறு தாங்கிக்கொள்வேன் என்று சருவேசுரனைப் பார்த்து மன்றாடினாள். அப்போது யேசுநாதரும் தேவமாதாவும் அவளுக்குத் தரிசனமாகிப் "பயப்படாமல் அதைப் பெற்றுக்கொள். நீ ஏமாற்றப்படமாட்டாய்" என்று கருணையோடு திருவுளம்பற்றினார்கள். அதுதொட்டு இந்த அற்புதத்தைப்பற்றி ஓர் சந்தேகமும் அவளுக்கு உண்டாகவில்லை. இலங்கைத் துறவியான இக்கன்னிகையின் அற்புத சம்பவத்தைச் சமாசாரப் பத்திரிகை மூலமாய் அறிந்த வண. தொன் அந்தோனியோ என்ற கார்சியா சுவாமியாரின் மித்திரனாகிய ஓர் சந்நியாச குருவானவர் அவளுடைய செப உதவிகேட்டு ஐரோப்பாவிலிருந்து வணக்கத்துக்குரிய

கார்சியா சுவாமியாருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவர் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு ஹெலேனாவைக் காணப்போனபோது அவள் பரவசமாய் இருப்பதை அறிந்து தன் சிநேகிதனுக்காகவும், ஒருமுறை ரோமா நகரில் தனக்குத் துணையாயிருந்த தொன் லூயிஸ் என்ற வேறொரு குருவானவருக்காகவும் மன்றாடும்படி அவளைக் கேட்டார். பரவசம் தெளிந்து அறிவு வந்த பின்பு ஹெலேனா சிரித்துக்கொண்டு அவரைப்பார்த்து அவருடைய அன்பான மித்திரர் இருவரும் இன்னும் உயிரோடு இருக்கிறதாகவும் தொன் அந்தோனியோ என்பவர் திருச்சபையின் மேன்மைக்காக மிகவும் முயற்சிப்பதாகவும் அவருடைய துன்பங்களில் அர்ச்சியசிஷ்ட பாப்பாண்டவரின் சாந்தத்தையும், தயவையும், அன்பையும், முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும் எனவும் அவருடைய காலம் கிட்டியிருக்கிறதெனவும் தொன் லூயிஸ் என்பவர் வெகு பக்தி சுறுசுறுப்போடு தேவ வார்த்தையைப் பிரசங்கிக்கிறார் எனவும் வெளிப்படுத்தினாள். (நாட்குறிப்பு 1872-ம் வருஷம் ஐப்பசி 19-ந் திகதி)

திருச்சபைக்கு அக்காலத்தில் நேரிட்ட பீடைகளைப்பற்றியும் அர்ச்சியசிஷ்ட பாப்பாண்டவரின் சத்துராதிகள் அவருக்கு வருவித்த தொந்தரவுகளைப்பற்றியும், ஸ்பானிய தேசத்தில் கத்தோலிக்க சபைக்கு உண்டான கேடுகளைப்பற்றியும் ஹெலேனா பலமுறை அறிவித்தாள். (1872-ம் வருஷம் பங்குனி 10-ந் திகதி, 1874-ம் வருஷம் ஆனி 3-ந் திகதி) அவளுக்கு உண்டான வேதனைகளைத் திருச்சபையின் மேன்மைக்காகவும், சுயாதீனத்துக்காகவும், பாவிகள் மனந்திரும்பவும் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாள். ஒரு முறை அர்ச்சியசிஷ்ட தெரேசம்மாள் அவளுக்குத் தரிசனையாகித் தன் இருதயத்தில் தைத்திருந்த முள்ளைக் காட்டி எளிய ஸ்பானியா தேசத்துக்காக மன்றாடும்படி துக்க சத்தத்தோடு (சோகதொனியுடன்) சொன்னாள். (1874-ம் வருஷம் புரட்டாசி 7-ந் திகதி) பரவசமாய் இருந்தபோது ஒருமுறை தனக்குக் கிடைத்த வெளிப்படுத்தலை ஹெலேனா வண. கார்சியா சுவாமியாருக்குப் பின்வருமாறு விபரித்தாள். "ஐரோப்பாவில் ஓர் வல்லபமுள்ள இராக்கினி இருக்கிறாள். அவள் தினமும் செபமாலை செபித்து அர்ச். பாப்பானவருக்காகச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள். திருச்சபையின் சத்துராதிகளுடைய பக்கத்தில் சேர்ந்து அர்ச். பாப்பானவருக்கு இடையூறுபண்ணாதபடி அவள் தன் புருஷனிடம் கேட்கிறாள். அவன் அதை அசட்டை செய்தால் அவளும் அவளுடைய மக்களும் அவனை விட்டுப்போய் விடுவதாக அவள் உறுதியாய்ச் சொல்லுகிறாள். அரசர்கள் இவ்

மாதத்திலேயே அர்ச். பாப்பானவரை அழித்துவிடத் தீர்மானித்தாலும் அது அவ்வாறு நடவாதென்று யேசுநாதசுவாமி எனக்கு அறிவித்தார். ஆயினும் யேசுநாதசுவாமி வாதைப்பட்டதுபோல அர்ச். பாப்பானவரும் வாதைப்படுகிறார். சத்துராதிகளின் வல்லமையால் அவரை அழிக்கச் செய்யும் முயற்சி வீணாகும் என்பதாம். (1872-ம் வருஷம் ஆனி 28-ந் திகதி)

பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பாகம் ஐரோப்பிய கத்தோலிக்க சபைக்கு வெகு இடைஞ்சலான காலமாய் இருந்தது. இயற்கைச் சாஸ்திரத்தை மேற்கொண்ட நவீன சாஸ்திரிகள் இயற்கையின் சிருஷ்டிகருக்கும் அவருடைய பரிசுத்த வேத கொள்கைகளுக்கும் எதிராய்ப் பிரசித்தமாக வேலைசெய்தார்கள். பொருள் விர்த்தியையும், சாதியின் எழுச்சியையும் தலை மேற்கொண்ட சனத்தின் அதிகாரிகள் மோட்சத்தையும், அமைதியையும் சமாதானத்தையும் அருவருத்து வல்லமைக்கு நீதி நியாயத்தை அடிப்படுத்தினார்கள். ஆகையால் அமைதியையும் சமாதானத்தையும் படிப்பித்த கத்தோலிக்க வேதமும் கத்தோலிக்க புண்ணியங்களும் அவர்களுக்கு வெறுப்பாயிற்று. மேலும் எல்லா இராச்சியங்களிலும் கலகத்தை மூட்டும்படி துஷ்டர்களைக் கொண்ட இரகசிய கூட்டங்கள், அடக்க ஒடுக்க மரியாதையைப் பற்றியும் சுயாதீனத்தைப்பற்றியும் தவறான நோக்கங்களைத் தேசங்களில் பரப்பின. இக்காரணத்தால் ஐரோப்பாவில் எத்தேசங்களிலும் திருச்சபைக்கு எதிரான வேலைகள் தொடங்கின. ஸ்பானிய தேசத்தில் சத்துருக்கள் வல்லமையுடையவர்களாய்ச் சந்நியாசிகளைத் தேசத்திலின்று துரத்தி அவர்களுடைய மடங்களையும் அரசுக்குரித்தாக்கிக் கொண்டார்கள். அவ்வகையான ஆட்சி முறை இத்தாலியிலும் தொடங்கியது. பதினெட்டு நூற்றாண்டுகளாகத் திருச்சபைக்குச் சொந்தமாய் இருந்த யாவும் கொள்ளையாடப்பட்டன சனங்கள், தேசங்கள், சபைகள், சத்துருக்களால் கொள்ளையிடப்பட்டன. 1870-ல் ஒன்பதாம் பத்திநாத பாப்பாண்டவர் வத்திக்கான் மாளிகையில் சிறையானார். அக்காலத்தில் பிரான்ஸ் தேசத்தை மூன்றாம் நெப்போலியன் என்னும் அரசன் ஆண்டான். அவன் ஒருமுறை திருச்சபையின் பக்கமாகவும் மறுமுறை திருச்சபைக்கு எதிராகவும் வேஷம் மாறி வேலைசெய்தான். எடுஜேனி இராக்கினி பத்தியும் ஒழுக்கமும் உள்ள ஓர் உத்தமியாகையால் தன் புருஷனை நல்வழியில் கொண்டு வர மிகவும் பிரயாசப்பட்டாள். அவளுடைய போதனைகளுக்குச் செவிகொடாது நடந்ததால் அரசன் தன் தேசத்தை அழித்து இராசமுடியையும் இழந்து பரதேசியாகி 1873-ம் ஆண்டு மரண

மானுன். . அவ்வாறே திருச்சபையின் பாரம்பரை உரிமையைக் கொள்ளையாடிய விக்றர் எம்மானுவேல் அரசன் நல்லவர்களின் பழிச் சொல்லைப் பெற்றுச் செத்துப்போனுன். ஆயினும் அவர்களால் துன்பப்படுத்தப்பட்ட ஒன்பதாம் பத்திநாத பாப்பாணவர் வத்திக்கான் மாளிகையில் ஓர் மறியற்காரன்போல் வசித்தபோதிலும கத்தோலிக்கரும் கத்தோலிக்கரல்லாதோருமான இருபகுதியினர்களாலும் நேசமும் சங்கையும் பெற்றுக்கொண்டு முப்பத்திரண்டு வருடம் திருச்சபையை ஆண்டபின் 1878-ம் ஆண்டில் பரலோக பிராப்தியானுர்.

## மேற்றிராணியாண்டவரின் தீர்மானம் :

ஹெலேனுவைப்பற்றிய விஷயம் யாவையும் விசாரணைசெய்தபின் வந்தனைக்குரிய மேற்றிராணியாண்டவர் தமது அறிக்கையை 1872-ம் ஆண்டில் ரோமா நகரத்திலுள்ள புரோப்பகாந்தா என்னும் விசுவாசப் பரப்புதல் சபை அதிகாரிகளுக்கு ஒப்பித்தார். இந்த அறிக்கையில் குறித்து அனுப்பிய விஷயங்களை நாம் சரியாய் அறியக் கூடாதபோதிலும் அவருடைய தீர்மானம் எப்படிப்பட்டதென்பதை வேறு கடிதங்களால் அறியலாம். 1872-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதி மேற்றிராணியாண்டவர் கார்மேஸ் சுவாமியாருக்குப் பின்வருமாறு எழுதியிருந்தார். "நமது நேசமுள்ள சுவாமியாரே! போளவத்தை என்ற உமது பங்கைச் சேர்ந்த ஹெலேனு என்னும் வாலிபப் பெண்ணின் சம்பவத்தைப் பற்றி கையொப்பமற்ற மூட எழுத்தாளரால் எழுதப்பட்ட வீண் காரியங்களின் நிமித்தம் உமது மனம் கலங்கியதாக நான் நினைப்பதில்லை. ஆயினும் என் நோக்கத்தை வெளிப்படுத்தல் என் கடமையென எண்ணுகிறேன். ஹெலேனுவென்ற பெண்பிள்ளையைப் பல கிழமைகளாகக் குருநாகல் கன்னியாஸ்திரி மடத்தில் நிறுத்தி அவளைப்பற்றிய விஷயம் யாவையும் வெகு நுணுக்கமாய் விசாரித்தபோதிலும் அவளுடைய நன்நடக்கைக்கு எதிரானவையும், அவள் உண்மையான தேவபத்தியுள்ள ஓர் உத்தமி யென்பதைக் காட்டாத எதுவும் அவளிடத்தில் இருக்குமெண நினைக்கக் கூடிய யாதொன்றையும் காணேன். நான் மிகக் கவனமாய் அவளைப்பற்றி விசாரணை செய்தேன். அவள் பரவசமாவதைப் பலமுறை கண்டேன். அவளைப்பற்றிய யாவற்றையும் ஒன்றும் விடாமல் வெகுகாலம் விசாரணை செய்தும் அவளுடைய நடக்கையில் கபடமாவது அஞ்ஞாபாவது ஓர் சிறு பழுதாவது காணக்கிடைக்கவில்லை. அதுமாத்திரமல்ல, எனக்கு ஒவ்வொரு முறையும் உண்டான

உணர்ச்சி யாதெனில் ஹெலேனு மெய்யாகவே கபடம் அறியாத சுத்த இருதயமுள்ள பத்தியுடைத்தான ஓர் பிள்ளை என்பதாம். அன்றும் இன்றும் என் நோக்கம் அவ்வாறுதான். அவள் சம்பந்தமான அற்புத சம்பவத்தையிட்டு ஓர் தீர்மானம்பண்ண இன்னும் காலம் வரவில்லையென்று நினைக்கிறேன். அவள் பரவசமாய் இருக்கும் வேளைகளில் அவளைப்பார்க்க மற்றவர்களுக்கு இடம் விட வேண்டாமென்று நான் ஓர் கட்டளை பிறப்பித்துள்ளேன். ரோமையால் யாதொரு கட்டளை வரும்வரையும் முன் சொன்ன கட்டளையொழிய வேறு யாதொன்றும் மேற்றிராணியாராகிய நம்மால் நியமிக்கப்படல் அவசியமின்று. மெய்யாகவே அவளுடைய நடத்தை யாதொரு குற்றச்சாட்டுக்கு இடங் கொடுப்பதில்லை. இக்கடிதத்தை முடிக்குமுன் இன்னுமோர் விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கொஞ்சக் காலத்துக்குமுன் நாம் உமது மீசாமைத் தரிசிக்க வந்தபோது உமது ஞானப் பிள்ளைகளுள் பெருந் தொகையினர் முக்கியமாய் ஆண்பிள்ளைகள் திவ்விய நன்மை உட்கொண்டார்கள். இதற்குமுன் அவ்வளவு அதிக தொகையானோர் ஒருபோதும் அவ்வாறு பெறவில்லை. இந்தச் சந்தோஷமான காட்சியைக்கண்ட என் இருதயத்தில் உண்டான மகிழ்ச்சியை இங்கு உமக்கு அறிவிக்கிறேன். ஐந்து வருடம், பத்து வருடம், பதினைந்து வருடம் அதற்கு அதிககாலம் திருச்சபையால் விலகி ஆத்தும கடமைகளை விட்டுவிட்டு இருந்த நிர்ப்பாக்கிய பாவிகள் பலர் திரும்பவும் சருவேசுரனோடு சமாதானமாகும் பாக்கியம் பார்க்க அப்போது நமக்குக் கிடைத்தது. உம்முடைய சிறியோரின் செபத்தையும் துன்பத்தையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு பாவிகள்மேல் இதற்குமுன் காணாத வரப்பிரசாத மழையைப் பெய்த சருவேசுரனுக்கு எனது முழு ஸ்துதியையும் ஒப்புக்கொடுத்தல் கடமையெனக் கருதுகிறேன். இக்கடிதத்தின் மட்டில் உமது விருப்பத்தைச் செய்யும்படி உத்தரவளிக்கிறேன் என்பதாம். மேற்றிராணியாருடைய கடிதத்தின் கடைசிப் பாகத்தில் சொல்லப்பட்ட புண்ணிய விர்த்தியைப்பற்றி கார்சியா சுவாமியார் மேற்றிராணியாண்டவருக்குப் பின்வருமாறு எழுதினார். மேற்றிராணியாண்டவர் நடத்திய ஞான ஒடுக்கத் தினங்களில் ஹெலேனாவுடைய செபத்தினதும் பத்திச் சுறுசுறுப்பினதும் வல்லமை அதிகமாய் உணரப்பட்டது. தூம்பில் இருந்த பெரும் பாவிகளும் கோணாவிலில் வசித்த பேயாராதனைக்காரரும் பாவசங்கீர்த்தனத்துக்கு வந்தார்கள். அவர்களுள் பெரும்பாலார் நல்லமனதோடே வந்தார்கள். (நாட்குறிப்பு 22-ந் திகதி சித்திரை 1872—4-ந் திகதி வைகாசி 1872)

## விசாரணையின் பிறகு :

குருநாகலில் இருந்து தன் ஊருக்கு வந்தபிறகும் முன்போலவே திருப்பாடுகள் நடைபெற்றன. வியாழக்கிழமை அதாவது தேவமாதா மோட்சத்துக்கு எடுபட்ட திருநாளன்று பின்னேரம் வணக்கத்துக்குரிய "று" சுவாமியாரும் (Boutan) பூட்டான் சுவாமியாரும் பெரேர் சுவாமியாரும் ஹெலேனாவைக் காண வந்தார்கள். அவளுடைய முகத்தில் வடிந்தோடிய இரத்தத் தாரைகளைக்கண்டு ஆச்சரியமுற்றார்கள். அப்பொழுது தலையிலிருந்து வடிந்த இரத்தத்தால் அவளுடைய முகம் அழகுகுன்றியதுமாயிற்று. வெள்ளிக்கிழமை அவள் சிலுவையில் அறையுண்டிருக்கும் காட்சியைப் பார்க்கத் திரும்பவும்போனார்கள். (நாட்குறிப்பு 26-ந் திகதி ஆவணி 1872) சனங்கள் முன்போலவே திரும்பவும் அவளைப் பார்க்கும்படி வந்தார்கள். சிலவேளைகளில் கலகங்களும் உண்டாயின. சத்துராதிகள் அவளுக்கும் திருச்சபையின் அதிகாரிகளுக்கும் தொந்தரவு செய்தார்கள். அவள் பலருடைய மதிப்புக்கு உரியவளானதால் இதையிட்டு அவளுடைய புண்ணியவிர்த்திக்குத் தடை வருமோ என்னும் சந்தேகத்தால் கார்சியா சுவாமியார் வருந்தினார். ஆகையால் திருப்பாடுகளின் வெளியடையாளத்தை நிறுத்தும்படி சருவேசுரனை மன்றாட அவர் ஹெலேனாவுக்குப் புத்திசொன்னார். அவளுடைய மன்றாட்டுக்குச் சருவேசுரனால் கிடைத்த மறுமொழி யாதெனில் அவள் அவருடைய சித்தத்துக்குப் பணிந்து நடக்கும்போது பயப்பட யாதொரு ஏதுவும் இல்லையெனவும் இன்னும் இரண்டு வருஷத்துள் வெளியடையாளம் மறைந்துபோகும் என்பதுமாம். (நாட்குறிப்பு 4-ந் திகதி வைகாசி 1872.)

1874-ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை வண. அஞ்ஜெலோ (Cardano) கர்தானோ சுவாமியாரும் பெரேர் சுவாமியாரும் ஹெலேனாவின் திருப்பாடுகளைப் பார்க்க வந்தார்கள். ஆயினும் அன்று அவ்விஷயம் சம்பவிக்கவில்லை. அதைப் பற்றி பெரேர் சுவாமியார் அவளை வினவியபொழுது அவள் பின்வருமாறு விடை பகர்ந்தாள். வேறொருவகை செய்ய நான் முடியாதவளாய் இருக்கிறேன். என்னை நிலத்தில் விழுத்துவதும் கட்டுவதும் வேதனைப்படுத்துவதும் யேசுவின் திருச்சித்தமாம். இன்று அவ்வாறு சம்பவிக்க அவர் சித்தமில்லை. இதன்மட்டில் எனக்கோர் வல்லமையும் இல்லையென்பதாம். (நாட்குறிப்பு 9-ந் திகதி பங்குனி 1874)

திருப்பாடுகளின் வெளி அடையாளம் இது தொட்டு நின்று போனதாயினும் உள்வேதனை மேலும் வெகுகாலம் நிலைத்தது. காட்சியும் தேவ சம்பாஷணையும் அடிக்கடி உண்டாயின. ஒரு சனிக்கிழமை அவள் பரவசம் ஆனபோது ஓர் காட்சி கண்டாள். அதாவது நெருப்பு நிறைந்த ஓர் பாத்திரத்தை அவளுக்குக் கொடுத்து அதைக் குடிக்கும்படி கட்டளையானது. அவள் முழு மனதோடு அதை யேசுநாதருக்கு ஒப்புக்கொடுத்து முடியும் [illegible]யும் அதைப் பானம் பண்ணினாள். அதுதொட்டு அவள் பத்தியுருக்கத்தால் நிறைந்தவள் ஆனாள். முன்னிலும்பார்க்க அதிக பெலன் அவளிடம் இருப்பதாகக் காணப்படுகின்றது. இதற்கு முன் யேசுநாதர் அவளை ஓர் சிறுமியைப்போல் கவனித்தபோதிலும் இதன்பிறகு அவர் அவளுக்கு அவ்வகைக் கவனிப்புக் காட்டவில்லை. (2-ந் திகதி வைகாசி 1874) அவளுடைய பயங்கரமான வியாதிக்குப் பிறகு முன்னிலும்பார்க்க, அதிகமாய் அவள் காட்சி காணப் பெறுகிறாள். போன வெள்ளிக்கிழமை இரத்தம் நிறைந்த ஓர் பாத்திரம் பானம் பண்ணும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. திரும்பவும் துன்பம் வேதனை வரக்கூடுமென அவள் எண்ணுகிறாள். (புரட்டாசி மாதம் 7-ந் திகதி 1874)

**ஹெலேனாவின் பிதா :**

சருவேசுரன் ஹெலேனாவுக்குக் காட்டிய விசேஷ கிருபை அனேகருடைய அறியாமை நீங்குவதற்கும் மனந்திரும்புதற்கும் காரணமாயிற்று. ஊர்ச்சனங்கள் தவறான கொள்கைகளை விட்டுவிட்டுச் சத்திய வேதத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆயினும் அவளுடைய தந்தை மாத்திரம் பொய்வேத முறைகளின்படி நாட்கழித்து மெய்க் கடவுளை வழிபடாமல் பிசாசுக்கும் தேவதைகளுக்கும் பலி கொடுத்துவந்தான். இது ஹெலேனாவின் துக்கத்துக்கு முக்கிய காரணமாய் இருந்தது. அவள் அடிக்கடி தகப்பனுக்காகச் சருவேசுரனிடம் முறையிட்டுச் செபித்திருக்கிறாள். 1874-ம் ஆண்டு அர்ச். மரியமதலேனம்மாள் திருநாளுக்கு முந்திய தினம் அவரைப்பற்றி அவள் மிகப் பயங்கரமான ஓர் காட்சி கண்டாள். அதென்னவென்றால் கறுப்பு நிறமான ஓர் சீலையால் மூடப்பட்ட வண்டியொன்றை ஓட்டிப்போகும் கருமையான ஆட்கள் சிலர் அவளுக்குக் காணப்பட்டார்கள். நீங்கள் எங்கே போகிறீர்களென்று அவர்களிடம் கேட்டபோது அவளுடைய தகப்பனைக் கொண்டுபோக வந்தோமென்று அவர்கள் மறுமொழி சொன்னார்கள். அவள் அழுதுகொண்டு "யேசுவே! அவர் பேரில் இரக்கமாயிரும்" என்று சொல்லிச் செபித்த

போது வண்டியோட்டுகிறவர்கள் திரும்பிப் போனார்கள். ஆயினும் அவள் தகப்பன் மனந்திரும்பும்படி யேசுநாதரை அவள் மன்றாடியபோது: "உன் மன்றாட்டை ஏற்றுக்கொள்ள நான் விருப்பமாயினும் அவன் என் தயவைப் புறக்கணிக்கும்போது நான் தயவுகாட்டுவது எப்படியென்று சொன்னார். இக்காட்சியின் பின் அவளுடைய இருதயம் அதிக துக்கத்தால் நிறைந்து போயிற்று. தகப்பனின் ஆத்துமத்துக்காக அவள் இப்போது கண்ணீர் சொரிந்து அழுகிறாள். அவனுக்காக யேசுநாதசுவாமி பட்ட பாடுகள் எவ்வளவு அதிகமென்று கடுந்தீர்வையில் அவன் அறிந்து கொள்வான் என அறிவிக்கப்பட்டது. அவர் அவள்மேல் கொண்ட அன்பால் அவனுக்குக் கடின தண்டனை கொடாமல் பொறுத்திருக்கிறார்." (நாட்குறிப்பு ஆடி மாதம் 22-ந் திகதி 1874) இதற்குப் பல மாசங்களுக்குப் பின் அவள் பரவசமாய் இருக்கும்போது அவளுடைய தகப்பனின் ஆத்துமத்துக்காக மன்றாடும்படி யேசுநாதர் அவளுக்குக் கட்டளையிட்டார். (ஐப்பசி மாதம் 11-ந் திகதி 1874) அந்தத் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததினால் வந்த பலனை வண. கார்கியா சுவாமியார் இவ்வாறு விபரிக்கிறார். இத்தனை வருஷகாலமாய் ஒப்புக்கொடுத்த வேண்டுதல்களையிட்டு ஹெலேனா தன் தகப்பனுக்காகச் செய்த மன்றாட்டை என் நேச யேசுநாதர் ஏற்றுக்கொண்டார் என நினைக்கிறேன். அவனுடைய கடினமான மனதை இளக்க அவர் தெரிந்துகொண்ட விஷயம் கொடிய ஓர் வியாதியாம். அவன் வியாதிப்பட்டபோது தன் ஆத்துமத்தைப்பற்றிய ஓர் வார்த்தையாவது இந்த மகளின் வாயால் புறப்படுவதை எதிர்த்தான். அவன் வாய்வு நோயால் வருந்தும்போது பராமரிப்புப் பெற்றது மற்ற மக்களாலேயாம். ஆயினும் நான் அவனிடம்போய் அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்ததாகவும், அவனைச் சுகமாக்கியதாகவும் 1880-ம் ஆண்டு மார்கழி மாதம் அவன் அடிக்கடி கனவில் கண்டான்.

கடைசியாகத் தேவ வரப்பிரசாதம் அவன் ஆத்துமத்தில் மிகப் பலமாய் வேலைசெய்தபடியால் அவன் என்னை அழைத்துப் பாவப்பொறுத்தல் அடைந்துகொள்ளத் தீர்மானித்தான். நான் அவனுடைய பாவசங்கீர்த்தனம் கேட்டு வியாதி ஆபத்துக்குரியதாய் இருந்ததால் அவஸ்தைப் பூசுதலும் கொடுத்தேன். அதன் பின் சற்றுச் சுகம் கிடைக்கவே அவன் வேதனையைக் கவனியாமல் திவ்விய பூசைக்கு வந்தான். இந்த ஊரிலுள்ள சில பாவிகளைப் போல் கோயில் சவக்காலை முதலியன பெற்றுக்கொள்ளும் நோக்கமாய் மாத்திரமல்ல, மெய்யான மனதோடு அவன் கடவுள் பக்கம் திரும்பி வந்தான். இப்போது அவன் தன் மகள் ஹெலேனு

வின் போதனைகளுக்குச் சந்தோஷமாய்ச் செவிகொடுக்கிறான். அவளில் மிகவும் விசுவாசம் வைக்கிறான். (ஐப்பசி மாதம் 1881-ம் ஆண்டு 408—10 பக்கம்) 1884-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி பின்னேரம் 7 மணிக்கு ஹெலேனுவின் தகப்பன் மரித்தான். அதற்கு எட்டு நாளைக்குமுன் அவன் அவஸ்தைப்பூசுதலும் மரணாயத்தமான தேவநற்கருணையும் பெற்றுக்கொண்டான். யேசுநாதரின் மதுரமான பரிசுத்த நாமத்தைக் கடைசி மூச்சு விடும்வரையும் அடிக்கடி உச்சரித்தான். அவனுடைய மரணம் ஓர் முன்மாதிரிகையான மரணமாயிருந்தது. இவ்வாறே தன் தகப்பனைப்பற்றிய ஹெலேனுவின் வேண்டுதல் யாவும் பூரணமாய் நிறைவேறின. இப்பொழுது யேசுநாதர் மட்டில் அவளுடைய நேசமும், பிரமாணிக்கமும் உறுதியாயிருக்கும். தன் தகப்பனுக்குக் கொடுத்த இந்த மேலான கொடையையிட்டு அவருக்கு என்ன பிரதிநன்றி செலுத்துவதென்று அவள் இருதயம் தயங்குகின்றது. அவனுடைய மரணத்துக்குப் பிந்திய நாள் அவனுடைய பிரேதத்தை ஆசீர்வதித்துப் பிரேத அடக்க பூமிக்கு நானும் போனேன். (ஐப்பசி மாதம் 1884—413—2 பக்கம்)

## புண்ணிய இலட்சணங்கள் :

சருவேசுரன் நம்மைச் சிருஷ்டித்தவர் ஆகையால் நமது ஆத்துமமும் சரீரமும் மனோதத்துவங்களும் சித்தமும் சரீர அலங்காரமும் இந்திரியங்களின் வல்லமை முயற்சிகளோடு நாம் முழுதும் அவருக்கே உரியவர்களாவோம். நமது இருத்தல் அவரால் வந்ததுபோல நமது கடைசி இளைப்பாறுதலும் அவரிடமே இருக்கவேண்டும். சிருஷ்டிகருக்குப் புறம்பே சிருஷ்டிக்குப் பெறுமதியுமில்லை. மகிமையும் இல்லை. உயிருள்ள உயிரில்லாத சகல பொருட்களும் அவருடைய மேலான மகிமையைத் தத்தம் சுபாவத்தின்படி வெளிப்படுத்துகின்றன. மனுஷன் ஞானமுள்ளவோர் சிருட்டியாகையால் சருவேசுரனை அறிந்து தன் சுய விருப்பத்தோடு அவரில் சார்பாக இருக்கவேண்டும். உன் ஆண்டவராகிய சருவேசுரனை உன் முழுமனதோடும் முழு ஆத்துமத்தோடும் உன் முழுப் பெலத்தோடும் நேசிப்பாயாக என்று சருவேசுரன் மனுஷனுக்குக் கட்டளையிட்டார். (Deut. VI. 3) அவனை முழு இருதயத்தோடும் நேசித்தல் நமது முக்கிய உைமயாகும். சிநேகமென்பது ஐக்கிய ஒன்றிப்பின் வல்லமையாம். நேசமாய்ச் சீவிக்கிறவர்களிடம் ஒற்றுமையுண்டு. ஒரே மனமும் ஒருமைப்பந்தனமும் உண்டு. தேவ-நேசமுள்ளவர்களாய்ச் சீவிக்கிறவர்கள் சருவேசுரனுக்குள் வாசஞ்செய்கிறார்கள். சருவேசுரன் அவர்க

ளுக்குள் வாசஞ்செய்கிறார். (அருளப்பர் IV—16) இந்த ஒற்றுமை தொடங்குவது முதன் முதல் நமது ஆத்துமத்தில் இஷ்டப்பிரசாதம் பதியும் நாளில்; அதாவது ஞானஸ்நானம் பெறும் நாளிலாம். அன்று ஆத்துமத்துள் உண்டாகும் மாற்றம் ஆச்சரியகரமானது. நமது ஞானத்துக்கும் சித்தத்துக்கும் புதுப் பெலன் கிடைத்துச் சருவேசுரன் வெளிப்படுத்திய சத்தியங்களைச் சரியாய் அறிந்து அவற்றை விசுவசிக்கவும் அவர் நம்முடைய ஒரே பாக்கியமென்று நம்பிக்கொண்டு அவரை நேசிக்கவும் நம்மாற் கூடியதாகும். மேலும் மனுஷராகிய நாம் இஷ்டப்பிரசாதத்தால் சருவேசுரனுடைய பிள்ளைகளாகி மோட்ச இராச்சியத்துக்கு உரிமைக்காரர் ஆவோம். இஷ்டப்பிரசாதம் நம்மிடம் இருக்கும் வரையும் நமது சகல நற்கிரியைகளும் சருவேசுரனுக்குப் பிரியமானவைகளாகி மோட்ச மகிமையை அதிகப்படுத்தும் புண்ணியங்களாகும். இந்தத் தேவபுத்திர அடையாளம் சாவான பாவத்தால் அழிந்துபோகும். அற்ப பாவத்தால் குறைந்து போகும். ஆயினும் இழந்துபோன ஞானச் சீவியத்தைப் பாவசங்கீர்த்தனத்தால் திரும்ப அடையலாம். குறைந்துபோன அலங்காரத்தை, வீரத்தைப் புதுப்பித்துக்கொள்ளலாம். இஷ்டப்பிரசாதம் கூடுகிற, குறைகிற அளவிற்குத் தேவநேசமும் கூடும், குறையும். மேலும் இப்புதுச் சுபாவத்துக்கொப்பச் செய்யப்படும் கிரியைகளால் அச் சுபாவத்தின் பெலன் அதிகரிக்கும். அது அதிகரிக்கும் அளவாக ஆத்துமத்தின் சத்துவமும் முயற்சியும் விர்த்திக்கும். அத்தோடு விசுவாசம், நம்பிக்கை, தேவநேசமும் மற்றும் சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களும் வேகமாய் வேலைசெய்யும். இஸ்பிரீத்துசாந்துவானவர் அவ்வகை ஆத்துமத்தைக் கிருபையாய்ப் பார்த்து அவருடைய ஏழு கொடைகளாலும் அதை அலங்கரிப்பார்.

இவ்வாறு ஞானஸ்நானம் பெறும் தினம் கிறீஸ்துவ ஆத்துமத்துள் மூட்டிய புண்ணிய அக்கினிப்பொறியானது அதிகரித்துப் பெலப்பட்டு, அதில் செறிந்து பரம்பி ஆத்தும தத்துவங்களுள் புதுச் சீவியத்தைப் பிறப்பித்து இந்திரியங்களை முதலாய் அடக்கிக்கொண்டு பெரும மதில்போல் விளங்கும். தேவநேச அக்கினியால் எரியும் ஆத்துமம் சருவேசுரனோடு எவ்வளவு ஐக்கியமாகிறதென்றால் அவரொழிய இவ்வுலகில் யாதொன்றும் அதற்குத் தோற்றாது சகல பொருட்களோடு தானும் இருப்பதாகத் தோற்றாது சருவேசுரன் மாத்திரமே அதற்குப் பிரத்தியட்சமாகும். அப்போது அர்ச். சின்னப்பரைப்போல அவ் ஆத்துமமும் சொல்லக்கூடும். "நான் சீவிக்கிறேன். ஆயினும் இப்போது நானல்ல,

ஞா. ச.—A. 3.

கிறீஸ்துநாதரே என்னுள் சீவிக்கிறார். (கலாத்தியர் II—2). என் னாண்டவரே! என் சர்வமுமே" (அர்ச். பிரான்சீஸ் அசீசி.)

ஹெலேனாவின் சரிதையால் வெளியாகும் சில புண்ணியங் களைப்பற்றி நாம் விமரிசையாய் யோசித்துப் பார்ப்போமாக. அநேகர், அவளைப்பற்றி எழுதியிருக்கும் சொல்லியிருக்கும் அற்புத செய்கைகளைமாத்திரம் கவனிப்பார்கள். இவைகள் சருவே சுரனால் கிடைக்கும் விசேஷ கிருபைக் கொடைகளொழிய யாதொருவரிடமுள்ள புண்ணிய அந்தஸ்தின் உறுதியான அடை யாளங்களல்ல. யூதாஸ்காரியோத் மற்ற அப்போஸ்தலர்களைப் போல் பேய்களை ஓட்டி நோயாளரைக் குணமாக்கிப் பல அற்புதங் களைச் செய்திருந்தானாயினும் அவற்றால் அவன் புண்ணியவானாக வில்லை. அநேக அர்ச்சியசிஷ்டர்கள் இவ்வுலகில் அற்புதங்கள் செய்யவில்லை. அவர்களுடைய இவ்வுலக சீவிய சரிதையில் யாதொரு புதுமையும் எழுதப்படவில்லை. அவர்கள் இவ்வுலகில் நடத்திய சீவியம் மறைந்தது, பிரசித்தியற்றது. ஆயினும் அவர்கள் நடத்தை உசித புண்ணியங்களால் நிறைந்திருந்தது. ஹெலேனா வின் புண்ணிய இலட்சணங்களுள் முதன்முதல் அறியவருவது அவளுடைய விசுவாசமாம். சிறுபருவத்தில் வேதசத்தியங்களைப் படிக்க வசதியில்லாதிருந்தபடியால் விசுவாசத்தில் அப்போது சிற்சில குறைகள் நடந்தன. ஆயினும் வேத விஷயங்களை நன் றாய்ப் படித்தவுடனே விசுவாசம் அவளுடைய நடத்தையில் உறுதியும் வல்லமையும் உள்ளதாயிருந்தது. திவ்விய பூசை காண்பதைப்பற்றியும் தேவநற்கருணையின் மட்டிலும் அவளிடம் பற்றியெரிந்த பத்திக்குக்காரணம் அவளுடைய உயிருள்ள விசு வாசமாம். தேவநற்கருணையில் மறைந்திருக்கிற யேசுநாதரைத் தன் சரீரக் கண்களால் கண்டதுபோல் நடந்தாள். ஆகையால் தேவநற்கருணை உட்கொண்ட நாட்களில் அவளிருதயத்திலுள்ள நேசாதுக்கினி உணரப்பட்டது. எங்கும் வியாபித்திருக்கிற சரு வேசுரன் மட்டில் காட்டிய பட்சத்தின் பயனாய் அர்ச். தம திரித் துவத்தினுடையவும் யேசுநாதருடையவும் சந்நிதியில் எப்போ தும் நடந்தாள். இதைப்பற்றி வண. கார்சியா சுவாமியார் இவ் வாறு சொல்லுவார்: "சருவேசுரனுடன் ஒன்றித்தலை இப்போது அவள் மிக நன்றாய் அனுபவிக்கிறாள். பரிசுத்த திரித்துவம் அவளைவிட்டு ஒருபோதும் விலகிப்போகாதென்று" தனக்குத் தோன்றுகிறதாக அவள் எனக்குச் சொன்னாள். யேசுநாத ருடைய இரக்கத்தைப்பற்றி அவருக்குத்தக்க நன்றியறிதல் காண் பிக்கத் தன்னால் ஒருபோதும் முடியாதென எண்ணிப் பயப்படு கிறாள். (நாட்குறிப்பு ஐப்பசி மாதம் 2-ந் திகதி 1871)

அவளுடைய உறுதியான விசுவாசத்தினால் தன் தகப்ப னதும் மூத்தசகோதானதும் தகாத செய்கைகளையும் வேறு குற் றங்களையும்பற்றி மனவியாகுலம் அடைந்தாள். அவர்களை அதி னின்று விலக்க வீரியமாய் முயற்சித்தாள். அதையிட்டு அவர் களால் அடி உதை வாதைவேதனை அனுபவித்தாள். தன் ஆத் தும குருவானவருக்கும் மேற்றிராணியாண்டவருக்கும் காட்டிய கீழ்ப்படிச்சி, சிரவணமும் திருச்சபையின் குருக்கள் மட்டில் காட்டின சங்கை வணக்கமும் அவளுடைய விசுவாச பத்தியில் தங்கியிருந் தது. அர்ச்சியசிஷ்ட பாப்பாண்டவரின் சுயாதீனத்தையும் நன் மையையும் திருச்சபையின் மேன்மையையும்பற்றி அவள் மனதை வருத்திய துக்கமும், அவள் ஒப்புக்கொடுத்த செபம், வாதை, வேதனைகளும் இந்த விசுவாசத்தை முன்னிட்டேயாம். அவள் மட்டில் சருவேசுரன் காட்டிய அற்புத சம்பவம் பிரசித்தமான போது சிலர் அவளைத் துன்பப்படுத்தினார்கள், பரிகாசம்செய்தார் கள். அவளைப்பற்றி அருவருப்பான தூஷண வார்த்தைகளைப் பேசினார்கள். ஆயினும் அவை யாவற்றையும் விசுவாச நிமித்தம் நல்லமனதோடு ஏற்றுக்கொண்டாள்.

உலக சாஸ்திரத்தின் மட்டில் பாண்டித்தியம் அவளிடம் இருக்கவில்லை. ஆயினும் சருவேசுரனைப்பற்றி அவளுக்கிருந்த அறிவு விளக்கம் அதிசயிக்கத்தக்கது. இப்போது அவளுடைய புண்ணிய பலன்களை மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறாள். அவளுடைய சிஷர்கள் அவளின் சம்பலத்தை அறியாவிடினும் அவள்மட்டில் அதிக சங்கையோடிருந்து அவளுடைய போதனைக் குப் பயபத்தியோடு செவி கொடுக்கிறார்கள். அவள் போதனை யைக் கேட்டுப் பொதுப் பாவசங்கீர்த்தனம்பண்ண ஆயத்தமான ஓர் பாவி ஓர்முறை என்னிடம் வந்தான். அவனுக்கு அதைப் பற்றி இருந்த விளக்கம் எவ்வளவு என்றால் என் போதனைகளால் முதலாய் அவ்வகை விளக்கம் அவனுக்குக் கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை. (காட்குறிப்பு சித்திரை மீ 30-ந் உ 1871). மற்றவர்களுக்குப் படிப்பிக்கும்போது புதிதான ஞான வெளிச்சம் தனக்குக் கிடைப்பதாக அவளுக்குத் தோன்றுகின்றது. மெய் யாகவே மற்றவர்களைப் படிப்பிக்கப் போதிய கெட்டித்தனம் அவ ளிடம் இருப்பதாகக் காணப்படுகின்றது. அவள் வார்த்தைகளைக் கேட்டு வெகுபேர் பலனடைகின்றனர். (கார்த்திகை மீ 10-ந் உ 1874). 1878-ம் ஆண்டு தை மாதம் ஹெலேனு யாதொரு அவ சிய கருமநிமித்தம் கொழும்பில் கன்னிகை மடமொன்றுக்குப் போனாள். வெகுபேர் அவளைக் காணவும் அவளோடு பேசவும் வந்தனர். அவர்கள் அவளுடைய பத்திநிறை வார்த்தைகளைக்

ஹெ. ச.—3. B.

கேட்டு அவளை விட்டுப்பிரிய மனமில்லாமல் புண்ணியநெறி ஞான சீவியம் என்பனபற்றிப் போதியமட்டும் அவளிடம் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டார்கள். (தை மீ 7-ந் உ 1878)

அவளுக்கு விசேஷ விளக்கமிருந்தது வேத சத்தியங்களை பற்றி மாத்திரமல்ல, சிலவேளை தன்னுடையவும் தன் துணை ?ளுடையவும் ஆத்தும அந்தஸ்தைப்பற்றிய விஷயங்களையும் தேவ வரத்தால் அறிந்திருந்தாள். அவளிருந்த மடத்தில் ஓர் கபடயான கன்னிகை பொய்க்காட்சிகளைப் பிரசித்தப்படுத்தித் தன ஆத்தும குருவானவரை அனுப்பி அவரைத் தவறான வழியிற் செலுத்த முயன்றாள். இவளுடைய நடத்தையின் நன்மை தீமையைத் தேவ பிரகாசத்தால் அறிந்த ஹெலேனா அவ்விஷயத்தை அவருக்கு அறிவித்தாள். இதைப்பற்றிக் கார்சியா சுவாமியார் இவ்வாறு எழுதியிருக்கிறார். அர்ச்சியசிஷ்ட தம திரித்துவத்துடன் ஒத்து வாழ்வதை அவள் நன்றாய் அனுபவிக்கிறாள். அவளுடைய புண்ணிய சாங்கோபாங்க விர்த்தியையும் இனிமேல் அவளுக்கு நேரிடப்போகிற துன்பங்களையும் "ஜீ" என்பவளைப் பற்றிய விஷயங்களையும் நன்றாய் அறிந்திருக்கிறாள். "ஜீ" என்பவளின் ஆத்தும அந்தஸ்தை வேறு வழிகளால் அல்ல தேவ வரத்தாலேயே அவள் அறிந்திருக்கிறாள் என்பதற்குச் சந்தேகமில்லை. (கார்த்திகை மாதம் 26-ந் திகதி 1871)

தேவநேசம் ஹெலேனாவின் ஆத்துமத்தில் பெரும் சுவாலையாக எரிந்ததினால், உலக ஆசை, மோக ஆசாபாசம், தகாத பற்றுதல், ஆங்காரம் முதலிய பாவதோஷங்கள் இந்த அக்கினிச் சுவாலையில் எரிந்து சாம்பலாயின. அப்பொழுது அவளுடைய பரிசுத்த ஆத்துமத்துக்கும் சருவேசுரனுக்கும் இடையே ஐக்கியம் அதிகரித்தது. அவர்மேல் அவளுடைய ஆத்துமம் இழுபட்டது. அவளுடைய எண்ணமும் ஆசையும் இயல்பாகவே அவரிடம் இழுபட்டன. தேவ சந்நிதியில் வாசம்பண்ணுதலும் யேசுநாதருடன் பிரிய சம்பாஷணை செய்தலும் உறுதியான பழக்கமாய் இருந்தன. அவளுடைய ஆத்தும அந்தஸ்தை அறிந்திருந்த கார்சியா சுவாமியார் இவ்விஷயத்தைச் சொற்பமாவது நமக்குச் சொல்லித் தருவாராக. "ஹெலேனா யேசுநாதருடைய மித்திரத்துவத்தை நன்றாய் அனுபவிக்கிறாள். (ஆவணி மீ 26-ந் உ 1870). யேசுநாதர் அவளிடம் காட்டும் விஷயம் புதுமைக்குரியது. நான் இன்று அவளோடு இரண்டு மணித்தியாலம் சம்பாஷித்தாலும் ஐந்து நிமிஷம் போலாவது தெரியவில்லை. யேசுநாதர் அவளுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறார். (தை மாதம் 1871—174-ம்

பக்கம்). இதன்பின் அவள் யேசுநாதரின் வேலைகளைப்பற்றிக் கவனிக்கவேண்டுமென்றும் அவர் அவளைக் கவனிப்பதாகவும் அறிவித்தார். அது தொட்டு அவள் யாதொரு வெளிவேலை செய்யும் போதும் தன் இருதயத்தில் யேசுநாதர் வசிப்பதாகத் தனக்குத் தோன்றுகிறதென்று எனக்குச் சொன்னாள். இந்த மேலான வரப்பிரசாதத்தைப்பற்றி அவள் வெகு ஆச்சரியப்படுகிறாள். (கார்த்திகை மாதம் 1871—246 பக்கம்). இப்போது இருக்கிறது அவளல்ல. சருவேசுரன் மாத்திரம்தான் எனச் சொல்லுகிறாள். அவள் யேசுநாதர் சந்நிதியில் இருக்கிறதையும் அவர் அவளுக்குப் படிப்பிக்கிறதையும்பற்றிச் சந்தேகிக்க முடியாது. (சித்திரை மாதம் 23-ந் திகதி 1871)

ஆயினும் ஹெலேனாவின் சீவியம் யாதொரு தொந்தரவும் இல்லாத ஆறுதல் நிறைந்த ஓர் காலமென்று நினைக்கப்படாது. பொற்கொல்லன் பொற்கட்டியை அடுப்பில் இட்டு நெருப்பால் பரீட்சை செய்யுமாப்போல சருவேசுரன் தமது அர்ச்சியசிஷ்டர்களைப் பரீட்சிக்கிறார். (ஞானி XII 13). மாத்தின் பெலனை அறிந்து கொள்வது கடும் புயற்காற்று வீசும்போதேயாம். நேசத்தின் பலாபலன் வெளிப்படுவது உபத்திரவங்கள் மத்தியிலேயாம். ஹெலேனாவின் சரீர வேதனையை முன் விபரித்துள்ளபடியால் அவளுடைய மன வேதனையை இங்கே சுருக்கமாய்க் காட்டல் தகும். சருவேசுரனை நேசிக்கும் ஆத்துமத்தின் பிரகாசமும் ஆறுதலும் சந்தோஷமும் தேவசந்நிதியாம். ஆகையால் அதை விட்டு நீங்குதல் அந்த ஆத்துமத்துக்கு வரக்கூடிய ஆகப்பெரிய துன்பமாகும். சிலவேளை சருவேசுரன் தமது அர்ச்சியசிஷ்டர்களுடைய சுபாவப்பற்றுதல் நேசத்தின் உறுதி ஆதியவற்றைப் பரீட்சித்தறியும்படியாக அவர்களை விட்டுவிலகுகிறார். அப்போது ஆத்துமம் அந்தகாரத்தால் நிறைந்துவிடும். வானமும் பூமியும் தன்னைத் துன்பப்படுத்தக் கலகம் செய்கிறதுபோல அதற்குத் தோற்றும்.

ஹெலேனாவின் சீவியத்தில் இவ்வகையான தருணங்கள் நேரிட்டன. கார்சியா சுவாமியாரின் வார்த்தைகளையே நாம் இங்கு குறிக்கிறோம். இந்த எளிய பிள்ளை இப்போது பெரும் ஆத்தும அந்தகாரத்தில் அமிழ்ந்திப் பாவச் சோதனைகளால் வருந்திச் சிறுமைப்படுகிறாள். அவளுடைய மனதை வேறுபக்கம் திருப்பியபடியால் யேசுநாதர் தம்முடைய சஞ்சரிப்பிலிருந்து அவளை நீக்கியதாக அவளுக்குக் கடுமையாய்ச் சொன்னார். இப்போது அவள் பிசாசின் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறதாக

அவளுக்குத் தோன்றுகிறது. சருவேசுரன் அவள்மேல் கிருபை கூர்ந்து இந்தக் கொடிய சோதனைக்குள் அகப்படாதபடி அவளைக் காப்பாற்றுவாராக. (தை மாதம் 1871—193-ம் பக்கம்). இதற்குச் சிலநாட்களுக்குப் பிறகு "முன்போலவே அவள் இன்னும் அந்தகாரத்திற்தான் இருக்கிறாள். யேசுநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளிய திருநாளன்று பரவசமாதல் முதலியன நின்றுவிட்டதால் அந்தகாரத்திலும் பயங்கரமான சோதனைகள் நிறைவிலும் சீவிக்கிறாள். ஆயினும் யாதொரு அந்நியர் அவளைக் காணவந்தால் வந்தவரைச் சந்தோஷப்படுத்தக்கூடிய நல்ல வார்த்தைகளே எப்போதும் அவள் வாயால் புறப்படும். இதைத் தடுக்கப் பிசாசு எடுத்த பெரும் முயற்சியும் வீணாயது." (வைகாசி மீ 1872—279-ம் பக்கம்).

"சில்வேளை அவளுடைய ஆத்தும சுத்தத்தைப்பற்றியும் அவளுக்குக் கிடைத்த விசேஷ வரப்பிரசாதங்களைப்பற்றியும் பெருஞ் சந்தேகம் அவள் இருதயத்தில் உண்டானதால் அதிக வேதனை அனுபவித்தாள். நரகப் பிசாசு அவளுக்குப் பலவகையான துன்பங்களை வருவித்தது. அவளுக்குப் பொய்க் காட்சிகளைக் காண்பித்து அவளை அழைப்பத் தெண்டித்தது. ஞானஒடுக்க நாட்களில் அவளால் வந்த நன்மைகளைப்பற்றிப் பிசாசு கோபங்கொண்டு... அவளுக்குப் பெரிய ஓர் துன்பம் வருவித்தது. அவளுடைய பாடுகள், பரவசமாதல் முதலியன அவளின் கபட தந்திரம் என்றும் அவள் என்னையும் மேற்றிராணியாண்டவரையும் அழைப்பித் திருச்சபைக்கு நிந்தை வருவித்ததாகவும் அவளுடைய கிரியைகள் பேய் மாயத்தால் செய்ததாகவும் அது அவளுக்குக் காட்டியது. ஞானஒடுக்கம் முடிந்தநாளிலேயே அவள் துக்கத்தால் அழுது அவள் மற்றவர்களை அழைப்பியபடியால் அவளுடைய பாவத்தை எல்லாவிடத்திலும் பிரசித்தம்பண்ண வேண்டும் என்பதாக எனக்கும் கிறிஸ்தீனுவுக்கும் அறிவித்தாள். (பங்குனி மீ 1874—325-ம் பக்கம்)." மேலும் விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகம் என்னும் புண்ணியங்களுக்கு விரோதமான சோதனைகள் அவள் மனதையும் இருதயத்தையும் பொடியாக்கின. (பங்குனி மீ 1871—196-ம் பக்கம்). இக்காலத்தில் பிசாசு லூலேனுவுக்கு ஓர்காட்சி கொடுத்துச் சோதித்தது. எவ்வாறெனில் அது யேசுநாதருடையவும் அவருடைய மாதாவுடையவும் வேஷங்களைப் போட்டுக்கொண்டு காவல் சம்மனசுவின் உருவங்கொண்ட வேறொரு பேயோடு காட்சி கொடுத்தது. அவளைப் பாதுகாக்கும்படி பேய்த் தூதனுக்கு நியமித்துப் பல விஷயங்களைப் பேசியது. அதனுடைய கபடத்தை உடனே அறிந்த லூலேனு அதற்கு ஓடிப்போகக் கட்டளையிட்

டாள்; அப்போது பிசாசு தப்புவதற்கு வழியில்லையெனக் கண்டு அதன் மெய்யான சாயலை அதாவது பயங்கர சத்துராதியின் உருவத்தைக் காட்டி மறைந்துபோனது. (கார்த்திகை மீ 20 1871)

ஆயினும் இந்த உபத்திரவங்கள் நடுவே அவள் இருதயத்துள் மிக அமைதியும் இருந்தது. இதனால் உண்டான சந்தோஷம் இருதயத்தில் பொங்கி வடிந்து அவள் முகத்திலும் விளங்கியது. அவளுடைய முகத்தில் எப்போதும் சம்மனசுகளுக்குரிய சந்தோஷம் விளங்கியதென கார்சியா சுவாமியார் சொல்லுகிறார். (கார்த்திகை மாதம் 26, 1872). சருவேசுரனுடைய திருக் கரங்களால் கிடைத்த துன்பமும் சுகமும் அவளுடைய சந்தோஷங்களாகும். அவ்வாறே அவளுடைய தாழ்ச்சிக்கும் அது காரணமாய் இருந்தது. பாரமான சிலுவை அதாவது பெருந் துன்பம் சுமக்க அவள் ஆசையாய் இருக்கிறாள். அதிலிருந்து நீங்கத் தான்பயப்படுகிறதாக எனக்குச் சொல்லுகிறாள். ஏனெனில் யேசுநாதர் அவளுக்கு அதிக நேசம் காட்டுகிறபடியாலும் அவர் எப்போதும் மதுரவசனங்களாலும் திவ்விய வழிகளாலும் அவளுக்குப் படிப்பிக்கிறபடியாலுமாம். சருவேசுரன் அவளுக்கு வரப்பிரசாதம் அருளும் அளவுக்கு அவளுடைய தாழ்ச்சியும் அதிகரிக்கின்றது. அவளுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பதால் நானும் மிக ஆறுதல் அடைகிறேன். மெய்யாகவே அவள் யேசுநாதரால் தெரிந்து கொள்ளப்பட்டவளாம்.'' (மேற்கூறிய புத்தகம் 230-ம் பக்கம்)

## துறைமுகத்தை யடைதல் :

முன் சொன்னபடி 1874-ம் ஆண்டின்பின் திருப்பாடுகளின் வெளியடையாளங்கள் சம்பவிக்கவில்லை. ஆயினும் உள்ளாங்க வேதனை இருந்தது. காலம் செல்லச் செல்ல அவளைக்காண வந்தவர்களும் அவளைப்பற்றி உண்டான கலகங்களும் குறைந்துபோயின. அதுதொட்டு அவளுடைய வெளியாங்க சீவியம் அலையில்லாத அசைவற்ற ஆழ்ந்த ஓர் நீர்த்தடாகம்போல் ஆயிற்று. கார்சியா சுவாமியார் ஸ்தாபித்த கன்னியர் சபையின் கன்னிகாஸ்திரிகள் அக்காலத்தில் பிள்ளைகளுக்குப் பாஷை எழுத்து ஞானோபதேசம் படிப்பித்தலும் புதுக்கிறீஸ்தவர்களுக்கு வேதம் கற்பித்தலுமாகிய வேலைகளில் ஏற்பட்டிருந்தபடியால் ஜெறேனும் அவைகளையே செய்தாள். ஆயினும் போதியநேரம் செபத்தில் தியானத்தில் கழித்தாள். இப்போது அவள் பாடசாலையிலுள்ள பெண்பிள்ளைகளைப் பாடப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதில் வெகு முயற்சி

யாய் இருக்கிறாள். அடிக்கடி பாவசமாகி உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களைத் தரிசிப்பாள். ஒரு முறை அவள் அங்கு கொண்டு போகப்பட்டு வெகு வேதனைப்பட்டாள். அதன்பின் அந்த ஆத்துமாக்கள்மட்டில் வெகு இரக்கம் கொண்டவளாய்த் திவ்விய பூசை வைக்கும்படி சொற்ப பணம் சேர்க்க முயற்சித்தாள். (வைகாசி 1877—388-ம் பக்கம்) கார்சியா சுவாமியாரின் நாளாந்த குறிப்புப் புத்தகத்தில் 1888-ம் ஆண்டு வரையும் அவளுடைய புண்ணிய விர்த்தியைப்பற்றிய விஷயங்கள் ஆவ்வவ்விடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. (*rf.* 421-ம் பக்கம்—424—442 மார்கழி மீ 1888)

1881-ம் ஆண்டு ஆவணி மாதம் மேற்றிராணியாண்டவர் போளவத்தைக்கு வந்தபோது ஹெலேனுவுக்கு விசேஷ தயவு காண்பித்து அவளுடையவும் அவளுடைய துணைச் சகோதரிகளுடையவும் விர்த்தியைப் பாதுகாத்துக்கொள்வதாகக் கார்சியா சுவாமியாருக்குப் பொருத்தம் பண்ணினர். (418-ம் பக்கம்) வயது முதிர்ந்த பிதாவின் மனதுக்கு அது மிக ஆறுதலைக் கொடுத்தது. 1889-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி கார்சியா சுவாமியார் குருத்துவம் பெற்ற ஐம்பதாம் வருட பொன் ஜூபிலி மீசாம் எங்கும் மிக கெம்பீரமாய்க் கொண்டாடப்பட்டது. 1900-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ந் திகதி அவர் அர்ச்சியசிஷ்டதன்மையுடையோராய்ப் பரலோகஞ் சென்றார். பத்தி நேசமுள்ள பங்குக் கிறீஸ்தவர்கள் அவருடைய பிரேதத்தை மிகப் பய பத்தியோடு போளவத்தைத் தேவாலயத்தில் அடக்கம் செய்தார்கள்.

**கடைசிக்காலம் :**

ஹெலேனுவுடைய பாலிய பருவந்தொட்டு அவளுக்குப் புண்ணிய வழியைக்காட்டி ஆபத்து நிறைந்த கடலைக் கடந்து நன்மரணமென்னும் துறைமுகத்துக்கு அவளுடைய ஆத்துமத்தைக் கொண்டுவந்த உத்தம குருவானவரின் மரணம்" அவளுக்குச் சொல்லிமுடியாத துக்கமும் நட்டமுமாய் இருந்தது. அவருக்குப் பிறகு போளவத்தை மீசாமுக்கு வந்த குருமார் அவளுக்குத் தயவும் சங்கையும் காட்டியபோதிலும் அவளுக்கு வந்த குறைகள் மரணமட்டும் நீங்கவில்லை. ஆயினும் அவள் தன் ஞானக்கடமைகளை, தேவ ஊழியத்தை முன்போலவே வெகு ஆசையோடு நிறைவேற்றி வந்தாள். பிள்ளைகளைப் படிப்பிப்பதைவிட மீசாமிலும், சூழவுள்ள கிராமங்களிலும் அஞ்ஞானிகளுக்கு வேதத்தைப்

பழித்து அவர்களைத் திருச்சபையில் சேர்க்க முயற்சிப்பாள். வழியில் நடந்த ஓர் கிறீஸ்தவனைக் கண்டால் அவனோடு இரக்கமாய்ப்பேசி நல்வழியில் திருப்புவாள். மிசாமின் பக்திக் கூட்டங்கள் செவ்வையாய் நடக்க எல்லாவகையாயும் குருமாருக்கு உதவியாயிருந்தாள். யேசுநாதருடைய திரு இருதயத்தின் மேல் பக்திச் சபையை அவள் முயற்சியால் கோணேஸில் ஸ்தாபித்தாள். இன்றுவரையும் அச்சபை அங்கு தொடர்ச்சியாய் நடைபெறுகின்றது. அவளுடைய மரணபரியந்தம் இலங்கையின் நாலு திசைகளிலும் இருந்து சந்நியாசிகளும் கன்னிகாஸ்திரிகளும் பலவகை அந்தஸ்தினரான கிறீஸ்தவர்களும் அவளுடைய செப உதவியைப் பெறும்படி அவளைத் தேடி வந்தார்கள். அநேகருடைய சங்கைக்கு உரியவளாய் இருந்தபோதிலும் தாழ்ந்த சீவியம் நடத்தினாள். சருவேசுரன் அவளுக்கு அருளிய மேலான வரப்பிரசாதங்களைப்பற்றி ஒரு வார்த்தையாவது அவள் வாயிலிருந்து ஒருபோதும் புறப்படவில்லை. அவற்றைச் சற்றுவது ஞாபகப்படுத்திய கை கால்களின் காயங்களைத் தழும்புகளை மறைத்துக் கொள்ள எப்போதும் முயற்சிப்பாள்.

**மரணம் :**

ஹெலேனா 82 வருடம் சீவித்துப் புண்ணிய பலன்களால் நிறைந்து புண்ணியமுள்ள சரிதையின் சிறப்பை யடைந்து விளங்கி 1931-ம் ஆண்டு மாசி மாதம் 8-ந் திகதி கோணேஸில் மரணமானாள். அவளுடைய அந்தியவேளையில் அவளுக்கு ஆத்தும கடமைகள் நிறைவேற்றியவர் நமது நாட்டு வேத போதகருள் வயதாலும் ஊழியத்தாலும் மேல்வரிச்சட்டமாய் விளங்கும் வணக்கத்துக்குரிய (Boulic) புளிக், ஓ. எம். ஐ. சுவாமியாராம். அவளுடைய மரணத்தைப்பற்றிய சமாச்சாரம் பரம்பவே எப்பக்கத்திலும் இருந்து சனங்கள் கூடிப் பரிசுத்த ஓர் சரீரத்துக்குச் செய்யும் சங்கை மரியாதையை அவளுடைய பிரேதத்துக்குச் செய்தார்கள். வந்தனைக்குரிய அதிமேற்றிராணியாண்டவரின் உத்தரவுப்படி பிரேதத்தைக் கோணேஸில் தேவாலயத்தில் ஒருநாள் முழுதும் வைத்திருந்து 10-ந் திகதி திவ்விய பூசையின்பின் சந்நியாச கன்னிகாஸ்திரிகளோடு கத்தோலிக்க பெருங் கூட்டமும் பூச்சியமாய் அதைக் கொண்டு சென்று கோணேஸில் பிரேத அடக்க பூமியில் (கல்லறையில்) அடக்கஞ் செய்தார்கள். அவளுடைய பூதஉடம்புக்கு என்ன நடந்தாலும் அவளுடைய புகழ் உடம்பு இன்றுவரையும் அழியாதிருக்கின்றது. தேவ சித்தத்தை நாம்

அறியோம். ஆயினும் தேவ குமாரனின் ஊழியக்காரியா ஹெலேனாவின் கீர்த்தியைப்பற்றி யாதொரு பூச்சியத்துக்குரி தேவசித்தமுண்டேல் அதுவே நிறைவேறுவதாகவென்று மிக பத்தி விநயத்துடன் பிரார்த்திக்கிறோம்.

"சகோதரரே! நான் உங்களிடத்தில் வந்தபோது கிறிஸ் நாதரைப்பற்றிய சாட்சியத்தைச் சிறந்தோங்கிய வாக்கியத்தினாலும் ஞானத்தினாலும் அறிவிக்கிறவனாக வரவில்லை. எப்படியெனி உங்களுக்குள்ளே நான் யேசுக்கிறீஸ்துநாதரை, சிலுவையி அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறிந்தவனா இருக்கவேண்டுமென்று எண்ணவில்லை."

*Nihil Obstat :-*
S. Asirvatham, o. m. i.
Censor Librorum.
Jaffna, 24-10-47.

*Imprimatur :-*
J. Emilianus Pillai, o. m. i.
Vic. Gen.
Jaffna, 28-10-47.

***PRAYER FOR THE BEATIFICATION OF THE STIGMATIC***

## ***HONOURABLE HELENA OF GONAWILA.***

God our loving Father, We thank you whole heartedly for the life of your servant Honourable Helena who had a special devotion to the Passion of Your Beloved Son, Jesus Christ. By giving her the gift of bearing on herself the marks of the Sacred wounds of the Passion of your Son, you have shown us a way to reach Your Son our Lord Jesus Christ.We thank you for the many blessings given to us through her intercession. Considering the holy and exemplary life she lived, grant us the joy of honouring her as Blessed Helena.

We ask this through the same Jesus Christ our Lord. Amen.

---

This Printing was Approved by His Lordship Valence Mendis Bishop of Chilaw on 2nd August, 2016)

(Printed and distributed **by HON HELENA FOUNDATION OF SRI-LANKA, St. Joseph's Church, Gonawila South, Dankotuwa, Sri-Lanka)**

(E/copies –English/Sinhala- from :jbpdissa@hotmail.com)